

தாயின் மணிக்கொடி பாரீர் !!
விடுதலை! விடுதலை !!
அமரகவி
பாரதியாரின்
இச்சுதந்திர கீதங்களை
கொலம்பியா
ரிகார்டில் கேளுங்கள்
கான ஸரஸ்வதி
D.K. பட்டம்மாள்
பாடிய
GE 6405
தாயின் மணிக்கொடி
விடுதலை! விடுதலை !!
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதறாஸ். 2.

புது தொடர்ச்சியில்

N. S. கிருஷ்ணனின்

முதல் படம்



என்னெஸ்கே பிலிம்ஸ்

பைத்தியக்காரன்?

N. S. கிருஷ்ணன்
T. A. மதுரம்
S. V. சகஸ்ரநாமம்

★

ஸ்டுடியோ :
நியூடோன்

★


டைரக்ஷன் :
கிருஷ்ணன், பஞ்சு

26-9-47 முதல்

சாகரிலும்
சரஸ்வதியிலும்

தினசரி 3 காட்சிகள்

ஜோதி பிலிம்ஸ் கார்ப்பொரேஷன் ரிலீஸ்



செய்திகளை முந்தித் தருகிற தினப் பத்திரிகைகள்

தினத்-தாள் சேலம் & கோயமுத்தூர்

தந்தி — மதுரை —


விவரங்களுக்கு :
'தந்தி' & 'தினத்தாள்' ஆபீஸ், பிராட்வே, சென்னை

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 8 | செப்டம்பர் 21 | சர்வசித்து புரட்டாசி 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.




LUX

என்ன சேதி?

பூசாரி வரம் கொடுக்கவில்லை!

இது ரொம்ப சரித்திரப் பிரசித்தமான விஷயம்தான்: முதன் முதலாக பிரிட்டிஷார் இந்தியாவில் காலடி வைத்த போது, தங்களை வியாபாரிகள் என்றே சொல்லிக் கொண்டார்கள். காலா வட்டத்தில் அவர்கள் பூமியையும் அதிகாரத்தையும் கைப்பற்றிக்கொண்டு, இந்தியாவுக்குத் தாங்கள்தான் கடவுளால் அனுப்பப்பட்ட எஜமானர்கள் என்று இறுமாப்புடன் கூறினர். வியாபாரிகளாக வந்து எஜமானர்களாக மாறிய அவர்களுடைய 'ராஜதந்திர'த்தைக் கண்டு உலகமே மெச்சியது. ஏன், இப்படிப்பட்ட எஜமானர்கள் நமக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமென்று இந்தியர்களில்கூடப் பலர் பல்லைக் காட்டினர். பிறகு பிரிட்டிஷார் வியாபார தந்திரத்தினால் அரசியல் ஆதிக்கத்தையும், அரசியல் ஆதிக்கத்தினால் வியாபார ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

இன்றோ, இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது. அதாவது பிரிட்டிஷார் அரசியல் ஆதிக்கத்தைக் கைவிட்டு விட்டனர். ஆனாலும் சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை என்ற கதையாக இருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தைத் துறந்து விட்டாலும், பிரிட்டிஷ் முதலாளிகள் தங்களுடைய வியாபார ஆதிக்கத்தைக் கைவிட மனங் கொள்ளவில்லை.

மலையேறி விட்டது

சமீபத்தில் இந்தியப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் அடங்கிய மகாநாடொன்று லண்டனில் நடந்தது. அவர்களெல்லோரும் கப்பல் வியாபாரப் போக்குவரத்து நிபுணர்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக மேற்படி மகாநாடு முறிந்து விட்டது. இந்தியாவில் கப்பல் வியாபாரம் தங்களுடைய ஏகபோக பாத்தியமாக இருக்க வேண்டுமென்ற பிரிட்டிஷாரின் பேராசையே மகாநாடு முறிந்ததற்குக் காரணமாகும். இனி அவ் விஷயமாக பிரிட்டிஷ் சர்க்காருடனோ அல்லது பிரிட்டிஷ் கப்பல் வியாபார முதலாளிகளுடனோ சமரசம் பேசுவதால் அணுவளவு பலனும் ஏற்படாதென்று மேற்படி மகாநாட்டுக்குச் சென்று திரும்பிய நிபுணர்கள் கூறி விட்டனர்.

நாற்பது வருஷங்களுக்கு முன்னால், அதாவது ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை காலத்தில் இந்தியக் கப்பல் கம்பெனியுடன் போட்டி போட்டு வெற்றிபெற்ற சபலம் இன்றுங்கூட பிரிட்டிஷ் கப்பலோட்டிகளுக்கு இருக்கலாம்! ஆனால், அத்தகைய சபலம் இனி நிறைவேறாது. ஏனெனில், அந்தக் காலம் மலையேறி விட்டது. அது தேசபக்தர்கள் ஜன்ம தண்டனை அடைந்த காலம். இதுவோ தேசபக்தர்கள் ஆட்சி புரியும் காலம்!

மூக்கு நீளுகிறது!

முன்னால் செல்பவன் முட்டிக் கொண்டால், பின்னால் செல்பவனுக்கு விளக்கு எதற்கு?

ஐக்கிய நாடுகள் சபையில் தென்னாப்பிரிக்கா, டச்சு சர்க்கார்களின் ஊழல்கள் அம்பலமானதிலிருந்து, பிரான்ஸுக்கு ஓரளவு ஞானோதயமாகியிருக்கிறது. தென்னாப்பிரிக்காவுக்கும், நெதர்லண்ட்ஸுக்கும் சில வல்லரசுகளின் தயவு இருந்து வருகிறதெனினும், சர்வதேச அரங்கத்தில் அவ்விரு நாடுகளின் மானம் பறி போய்விட்டது என்பதில் சந்தேகமில்லை. அதாவது, தென்னாப்பிரிக்கா, டச்சு சர்க்கார்கள் ஜனநாயகத்துக்கும் சர்வதேச நீதிக்கும்

விரோதிகள் என்பது அந்தச் சபையில் ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. எனவே, அதே கதி தனக்கும் ஏற்படுமுன் பிரான்ஸ் விழித்துக் கொண்டது வரவேற்கத் தக்கதேயாகும்.


இந்தோ சைனாவிலுள்ள வியட்நாம் குடியரசுடன் தாங்கள் எவ்வித சமரசப் பேச்சும் வைத்துக் கொள்ள முடியாதென்று சென்ற பல மாதங்களாக வீம்பு பேசி, வியட்நாமியர்களுக்குச் சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்களை விளைவித்து வந்த பிரான்ஸ், இப்போது தானாக வலுவில் வியட்நாம் குடியரசுடன் சமரசம் பேச முன் வந்திருக்கிறது. காலனி ஆதிக்க முறை செத்து விட்டது என்று இந்தோ சைனாவிலுள்ள பிரஞ்சு ஹைகமிஷனரே ஒப்புக் கொண்டிருக்கிறார்! வெளி நாட்டு விவகாரம், இராணுவம் இவற்றைத் தவிர மற்ற சகல துறைகளிலும் வியட்நாமுக்குப் பொறுப்பாட்சி வழங்க பிரான்ஸ் தயாராயிருக்கிறது என்கிறார் அவர்.

ஒப்புக்கொள்வார்களா?


எனினும் மேற்படி அரை குறையான பொறுப்பாட்சியை வியட்நாமியர்கள் ஒப்புக் கொள்வார்களா வென்பது இனிமேல்தான் தெரிய வேண்டும். பொறுப்பாட்சி வழங்குவது என்று தீர்மானித்த பின் அவ்வாறு அரை குறையான அதிகார மளிப்பது, பிரான்ஸை இன்னும் ஏகாதிபத்திய ஆசை விட்டபாடில்லை யென்பதையே காட்டுகிறது. ஒரு நாட்டில் அந்த நாட்டின் சம்மதமின்றி அன்னியத் துருப்புகள் இருப்பது அடிமைத் தனத்தின் சின்னமாகும். இதை மனதில் கொண்டு தான் ஜவஹர்லால்ஜி சமீபத்தில், ஆசிய நாடுகளில் மேனாட்டுத் துருப்புகளுக்கு என்ன வேலை என்று கேட்டார். எனவே, வியட்நாமியர்கள் பிரான்ஸின் அதிகார ஆதிக்கமற்ற பூரணப் பொறுப்பாட்சி பெறும் வரையில் திருப்தி யடைவதற்கில்லை.

நிகழ்ச்சிச் சித்திரம்





-சாஸ்திரி



சகோதர ஹத்தி வேண்டாம்

மதத்துக்கு இப்போதுதான் உண்மையாக ஆபத்து ஆரம்பமாகியிருக்கிறது.

மதத்துக்கு மாத்திரம்தானா ஆபத்து ஏற்பட்டிருக்கிறது? மதம், தேசம், தர்மம், கலை, நாகரிகம் எல்லாவற்றிற்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

பகுத்தறிவு படைத்த மனிதர்கள் இரத்த வெறி பிடித்த மிருகங்களாக மாறி விட்டால், மதம், தேசம், நாகரிகம் முதலியன எவ்வாறு பத்திரமாக இருக்க முடியும்?

முஸ்லிம்கள் எல்லோரும் சதிகாரர்களாகவும் கொலைகாரர்களாகவும் இருந்தால், அவர்கள் இஸ்லாத்துக்கே குழி தோண்டியவர்களாவர் என்று மகாத்மா காந்தி எச்சரித்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மேற்படி எச்சரிக்கை, சதி, துரோகம், படுகொலைகள் முதலியவற்றில் ஈடுபடும் சகல மதத்தினருக்கும் பொருந்தும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இப்போது தேசத்தில் நடந்து வரும் விபரீத சம்பவங்களுக்கெல்லாம் மூல காரணஸ்தர் யார் என்பது பற்றி ஆராய்வதினாலோ, அல்லது ஒருவர் மீது மற்றொருவர் குற்றங் குறைகள் கூறிக் கொண்டிருப்பதினாலோ யாதொரு பலனும் ஏற்படப் போவதில்லை.

ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும், நாசகரமான மார்க்கத்தை விட்டுவிட்டு நல்வழி காணும்படி செய்ய வேண்டியதே தலைவர்களின் கடமையாகும்.

இந்த மகத்தான கடமையை மகாத்மா காந்தி வங்காளத்தில் அற்புதமாக நிறைவேற்றி விட்டார். அவரது அற்புத முயற்சியின் பலனை முஸ்லிம் லீக் பத்திரிகைகளும், கிழக்கு வங்காளத்திலுள்ள லீக் தலைவர்களும் கூட வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

அந்த மகானின் ஆத்ம சக்தியும், பண்டித ஜவாஹர்லால் நேருவின் இடைவிடா முயற்சியும் இப்போது டில்லியிலும் கிழக்கு பஞ்சாபிலும் ஓரளவு பலனைக்கொடுத்துவருகின்றன.

அதுபோல் முஸ்லிம் லீக் தலைவர்களும் தீவிர முயற்சி செய்வார்களாயின், தேசத்தில் ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலைமை சீர்திருந்துமென்பதில் சந்தேகமில்லை.

• • •

இதுவரையில் லீக் தலைவர்களின் மனோபாவம் எவ்விதமிருப்பினும், சமீபத்தில் ஜவாஹர்லால்ஜி, ஜனாப் லியாகத் அலிகானுக்கு அனுப்பியுள்ள பதிலில் இருந்தாவது அவர்களின் சந்தேகம் தீர்ந்து பாகிஸ்தான், இந்தியா இரண்டுக்கும் க்ஷேமம் உண்டாகுமென்று நம்புகிறோம்.

"பாகிஸ்தானை விரோதிகள் சூழ்ந்து கொண்டிருப்பதாகவும், அதை அழிக்க அவர்கள் முயற்சி செய்து வருவதாகவும் ஸ்ரீ லியாகத் அலிகான் கூறியுள்ளார்.

"இந்திய சர்க்கார் விஷயத்தில் லீக் தலைவர் அத்தகைய நோக்கத்தைக் கற்பிப்பது துர்ப்பாக்கியமாகும்.

"எங்களில் எவரும் பாகிஸ்தானை விரோதியாகக் கருதியதில்லை. பாகிஸ்தானை அழித்து விட வேண்டுமென்ற நோக்கமும் எங்களுக்கு இல்லவே இல்லை.

"பிரிவினைக்குமுன், அதைத் தடுக்க நாங்கள் முயற்சித்தோம்.

"ஆனால், பிரிவினைதான் என்று தீர்மானிக்கப்பட்டபின், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் விஷயமாக எங்கள் கடமையை அந்தரங்க சுத்தியுடன் செய்தே வந்திருக்கிறோம்.

"துர்ப்பாக்கியகரமான தற்போதைய கொந்தளிப்பு அடங்கியபின், — இரு சர்க்கார்களுக்கும் பரஸ்பரம் அன்னியோன்னிய பாவம் ஏற்பட்டபின், இரு சாராரும் இஷ்டப்பட்டால் மீண்டும் ஒன்றுபடலாம்.

"இந்த எண்ணத்தைத் தவிர பாகிஸ்தான் மீது விரோதம் என்பது எங்கள் மனதில் எள்ளளவும் இல்லை."

பண்டித ஜவாஹர்லால் நேருவின் உணர்ச்சி ததும்பும் உருக்கமான பதில்

இனியாவது லீக் தலைவர்களின் சந்தேகத்தைத் தீர்க்குமென்று கருதுகிறோம்.

ஏனெனில் பாகிஸ்தானை விரோதியாகக் கருதுவதால் ஹிந்துக்களுக்கோ, இந்தியாவை விரோதியாகக் கருதுவதால் முஸ்லிம்களுக்கோ எள்ளளவு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

ஒன்றுக்கொன்று வெகு தூரத்திலுள்ள நாடுகளே இன்று பரஸ்பரம் ஒத்துழைப்பை நாடி வருகின்றன. பரஸ்பரம் ஒத்துழைப்பதுதான் க்ஷேமத்துக்கான வழியென்றும் வற்புறுத்தி வருகின்றன.

அப்படியிருக்க, ஒரே தேசத்தில் சென்ற பல நூற்றாண்டுகளாகச் சகோதரர்கள்போல் வாழ்ந்து வரும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் விரோதிகளாகக் கருதுவது பாகிஸ்தானுக்கும் ஆபத்தாகும். இந்தியாவுக்கும் ஆபத்தாகும்.

விரோதிகளாகக் கருதுவதே ஆபத்தெனில், சகோதரர்களான இரு சாராரும் படுகொலைகளில் ஈடுபடுவதால் எத்தகைய பயங்கர நிலைமை ஏற்படும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுவதும் முடியாத காரியமாகும்.

* * *

சாந்தியின்றி இரத்தமின்றி சாத்விகப் போரினால் சுதந்திரம் பெற்று, மானிட வர்க்கத்துக்கே அதியற்புதமான ஒரு புதிய வழியைக் காட்டி, உலகத்தையே பிரமிக்கச் செய்து, சரித்திரத்திலும் புகழிடம் பெற்ற பாரத நாட்டின் இன்றைய நிலையைப் பற்றி எண்ணவும் மனம் கூசுகிறது.

“பாகிஸ்தான் தொடர்ந்து நவநூன வழியிலேயே சென்று வருமாயின் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் ஏற்பட்டே தீரும்” என்று மகாத்மா காந்தி எச்சரிக்கை செய்யும்படியான நிலைமை உண்டாகியிருப்பதிலிருந்தே, தற்போதைய கொந்தளிப்பின் சகிக்க முடியாத தன்மையைச் சகலரும் உணர்ந்து கொள்ளலாம்.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவின் சுதந்திரத்தை அபகரித்து, கொடுங்கோல் புரிந்து வந்த அன்னியர்மீதுகூட பலாத்கார முறைகளைக் கைக்கொள்ள விரும்பாத இந்திய மக்கள், ஒரு பாவமும் அறியாத, நிரபராதிகளான தங்கள் சகோதர சகோதரிகளையும், அவர்களுடைய சிசுக்களையும் நெஞ்சில் சிறிதும் ஈவிரக்கமின்றிப் பதினாயிரக் கணக்கில் படுகொலை செய்யத் துணிந்ததன் மர்மம் என்ன?

ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருப்பது போன்று, கொசுவையும் பாம்பையும் கூடக் கொல்லுவது ஜீவ ஹிம்சை என்று கருதும் அன்பு மயமான உள்ளம் படைத்த ஜனங்கள் வெறி பிடித்துத் தங்களையே மறந்து மகா கொடிய மிருகங்களாக மாறியதன் மர்மம் என்ன?

தெய்விக சக்தியால் இயக்கப்பட்டு வந்த பாரத நாட்டு மகா ஜனங்களை, ஏதாவதொரு சைத்தான் வெறி ஆட்கொண்டு விட்டதா?

அன்பே உருவான மகாத்மா காந்தியினுடைய தெய்விக சக்தியின் முன்னிலையில், மேற்படி சைத்தான் வெறியாட்டம் எவ்வளவு காலம் நீடிக்க முடியும்?

ஏகாதிபத்திய வெறியர்கள்கூட யுத்தம் என்ற பெயரால்தான் ஜனங்களைப் படுகொலை செய்தனர், செய்து வருகின்றனர்.

கொடிய காட்டு மிருகங்கள்கூடப் பசித்தபோதுதான் மற்றப் பிராணிகளை அடித்துத் தின்கின்றன.

ஆனால், இன்று இந்தியாவில் ஏற்பட்டுள்ள வெறியோ சரித்திரத்திலேயே கண்டிராத மகா பயங்கரமான ஒரு புதிய வெறியாக இருக்கிறது.

யாதொரு காரணமுமின்றிப் பதினாயிரக் கணக்கானவர்கள் வெறி பிடித்து நிரபராதிகளான ஜனங்களைப் படுகொலை செய்வது சர்வ மத விரோதமானது. அத்தகைய வெறி மானிட வர்க்கத்தையே அழிக்கக் கூடியது, நாகரிகத்தையே நாசம் செய்யக் கூடியது.

பாகிஸ்தான் தேசத்துக்கு மகத்தான ஆபத்தாக முடியுமென்று நமது மாபெருந் தலைவர்கள் எச்சரித்தார்கள். ஆனால், இந்தியாவில் அமைதி நிலவ வேண்டுமாயின் பாகிஸ்தான் ஏற்பட்டுத்தான் தீரவேண்டும் என்று முஸ்லிம் லீக் தலைவர்கள் கருதியதால், நமது தலைவர்களும் அதற்கு இசைந்தனர். எப்படியாவது தேசத்தில் அமைதியும் சகோதர பாவமும் ஏற்படட்டும் என்ற பரிசுத்தமான உள்ளத்துடன்தான் நமது தலைவர் திலகங்கள் தேசப் பிரிவினையையும் அங்கீகரித்தனர்.

எனினும், பாகிஸ்தான் ஏற்பட்டும் அமைதி உண்டாகவில்லை. அதற்கு மாறாக நிலைமை இன்னும் அதிக அலங்கோலமாகி விட்டது.

இரத்த வெறி பிடித்த ஜனக் கூட்டம் செய்து வரும் படுகொலைப் பாதகங்கள் ஒருபுற மிருக்க, அதன் விளைவாக மற்றொரு மகத்தான பிரச்னையும் முளைத்திருக்கிறது.

அதுதான் ஜனப் பரிவர்த்தனை யாகும்.

அதாவது பாகிஸ்தானி லுள்ள ஹிந்து, சீக்கியர்களை இந்தியாவுக்கும், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களைப் பாகிஸ்தானத்துக்கும் அனுப்பி விடுவது என்பதே.

கற்பனைக்கும் எட்ட முடியாத அந்தப் பெரும் விபரீதத்தைச் சமாளித்துத் தீர வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

* * * *

எனினும் இந்த மகத்தான பிரச்னைக்கு முடிவு காண்பதரிது.

ஏனெனில், இப்போது லட்சக் கணக்கில் ஆரம்பமாகியுள்ள ஜனப் பரிவர்த்தனை கோடிக் கணக்கிற்கு வருமாயின், அந்தச் சோதனையில் இந்தியா வெற்றி பெறுவது மகா கடினமாகும்.

ஆடு மாடுகளைப் போலவும், ஜடப் பொருள்களைப் போலவும் ஜனங்களை எதற்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டும்?

அவ்வாறு பரிவர்த்தனை செய்து கொள்ளுவதால், தற்போது பாஞ்சாலத்திலும் டில்லியிலும் மனிதனை ஆட்டி வைத்து வரும் பகை, துவேஷம், வஞ்சக புத்தி முதலிய பேய்களுக்கு சிரஞ்சீவி வரம் அளித்தது போலாகுமே யன்றி, அதனால் நிலைமை சீர்பட்டு விடப் போவதில்லை.

அதனால் தான், லட்சக் கணக்கான ஹிந்துக்களையும், சீக்கியர்களையும், முஸ்லிம்களையும் பரிவர்த்தனை செய்து கொள்வதென்பது மனதினாலும் நினைக்க முடியாத விஷயமென்று மகாத்மா காந்தி மனம் துடிக்கிறார்.

"ஜனப் பரிவர்த்தனைக்கு இணங்க முற்றிலும் மறுத்து விடுவதுதான். பாகிஸ்தான் செய்துள்ள பெருந் தவறைச் சீர்திருத்துவதற்கு உற்ற வழியாகும். வீடு வாசல்களிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களை, ஹிந்துக்களும் சீக்கியர்களும் மீண்டும் அவரவர் வீடுகளுக்கு வரும்படி வருந்தி யழைக்க வேண்டும். தைரியமாக அவ்வாறு செய்தால், நாட்டையே கலங்க வைத்துள்ள அகதிகள் பிரச்னை வெகு சுலபமாகத் தீர்ந்துவிடும்" என்று மகாத்மா காந்தி புத்திமதி கூறியுள்ளார்.

ஜனப் பரிவர்த்தனை ஒரு பெரும் நாசகரமான முறை யென்பதை சிறந்த அறிஞரும் ஜனங்களின் க்ஷேமத்தில் கண்ணுங் கருத்துமுள்ள சிலருமான ஸர் மிர்ஸா இஸ்மெயிலும் எடுத்துக் காட்டி யிருப்பதன் மூலம், மிகவும் நெருக்கடியான சமயத்தில் அவர் தேசத்துக்குச் சிறந்த தொண்டு புரிந்திருக்கிறார் எனலாம்.

"இந்தியாவின் பிரிவினையை, நம்மில் பலரும் நிர்ப்பந்தம் காரணமாக மிகுந்த துக்கத்துடனேயே ஒப்புக் கொண்டோம். பிரிவினை அமைதியாக நடைபெறுமென்றும் நம்பி வந்தோம். ஆனால், இன்றுவரை நமது நம்பிக்கை நிறைவேறவில்லை.

"நாட்டின் சில பாகங்களில் பேய்த் தனமும், இரத்தக் களரியும், நாச வேலைகளும் தாண்டவமாடுகின்றன.

"அத்தகைய அட்டூழியங்கள் நம் நாட்டில் நடக்கக் கூடுமென்று யாருமே நினைத்திருக்க முடியாது.

"நமது சீடர்களுக்கு பலாத்கார முறைகளைக் கற்பித்த இரத்த வெறி பிடித்தவர்களைச் சரித்திரம் அழுத்தமாகக் கண்டித்தே தீரும்."

பாரத நாட்டுக்குக் களங்கத்தை உண்டு பண்ணியுள்ள இரத்த வெறியை, ஸர் மிர்ஸா இஸ்மெயில் மேற்கூறிய விதம் வெகு வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

ஆனால், தேசத்தின் நல் வாழ்வுக்கே பங்கம் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான சமயத்தில்கூட, லீக் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கைகள் ஒருதலைப் பட்சமாக இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

பரஸ்பரம் குறைகள் சொல்லிக் கொண்டிருக்க இது சமயமல்ல. பாமர ஜனங்களின் ஆவேசத்தை அடக்கி அவர்களைச் சாந்தப்படுத்துவதன் மூலமே தற்போதைய பயங்கரமான பிரச்னையைச் சமாளிக்க முடியும்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களைச் சகோதரர்களாக பாவிக்க வேண்டுமென்று காந்திஜி உபதேசம் செய்வது போல், லீக் தலைவர்களும் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிமல்லாதாரைச் சகோதரர்களாகக் கருத வேண்டுமென்று வற்புறுத்த முற்படுவார்களாயின், தற்போது நடந்து வரும் சகோதர ஹத்தி நிற்க வழியுண்டாகும்.



ஆடல் பாடல்

"கர்நாடகம்"



மாயவரம் கிருஷ்ணையர்

"ஆயிரம் ஆனாலும் மாயவரம் ஆகாது!" என்பது மாயவரத்தில் வழங்கும் பழமொழி. இதன் உண்மையை உணர்ந்து மாயவரம் வாசிகள் பலர் "நமக்கு இந்த ஊர் ஆகாது!" என்று புறப்பட்டு விடுவது உண்டு! அப்படிப் புறப்பட்டு மயிலாப்பூருக்கு வந்து சேர்ந்தவர்களில் மாயவரம் கிருஷ்ணையர் ஒருவர்.

மாயவரத்தின் மகிமை மற்றத் துறைகளில் எப்படியானாலும், மாயவரத்தின் பெரிய கோவில், மாயவரம் வீதிகளின் செம்மண் புழுதி, மாயவரத்தின் சங்கீதம் இவை மூன்றும் பிரசித்தமானவை.

மாயவரம் வீதிகளில் சற்று நடந்தால் எவரும் துறவியாகி விடலாம். துணிகளுக்குக் காவி போட வேண்டிய அவசியமே யில்லை. இதனாலேதான் சுவாமிகள், சந்நியாசிகள், சந்நிதானங்கள் முதலியோர் மாயவரத்தைத் தேடிப் போவது வழக்கம்.

கர்நாடக சங்கீதம் வளர்ந்து சிறந்த ஊர்களில் மாயவரம் ஒன்று. ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை, ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதி முதலிய சாஹித்ய கர்த்தர்களும், வீணை வைத்திநாதய்யர் போன்ற சங்கீத வித்வான்களும் மாயவரம் வாசிகள். மாயவரத்து வீதிகளில் உள்ள எலெக்டிரிக் கம்பங்களில் காதை வைத்துக் கேட்டால், மேற்படி கம்பங்கள் 'தம்த தம்த தம்தா தனம்தா தனம்தா' என்று தானம் பாடிக் கொண்டிருப்பது கேட்கும்.

அத்தகைய மாயவரத்தில் மகா வித்வான் சிமிழி சுந்தரப்பையரிடமும், மகாராஜபுரம் விசுவநாத ஐயரிடமும் சங்கீத வித்தை பயின்றவர் மாயவரம் கிருஷ்ணையர். அப்படிப் பயின்ற பிறகு, மாயவரத்துக்கு ஒரு துவா ஸ்நானம் செய்துவிட்டு மயிலாப்பூருக்கு வந்து விட்டார்.

சங்கீத வித்வான்கள் இடம் விட்டு இடம் மாறினால், நட்டுப் போட்ட செடியையும் மரத்தையும் போல் அவர்களுடைய சங்கீத வித்தை சிறந்து வளர்ந்து நல்ல கனிகளைக் கொடுக்கிறது.

அதனாலேதான் மதுரை மணி ஐயர் மயிலாப்பூரிலிருந்து மாயவரம் போனார். மாயவரம் கிருஷ்ணையர் மாயவரத்திலிருந்து மயிலாப்பூருக்கு வந்தார்.

இன்னும் நமது வித்வான்களில் பலர் திருவிதாங்கூருக்குப் போய் ஆஸ்தான வித்வான்கள் ஆனபிறகு அவர்களுடைய சங்கீத வித்தை நன்றாகச் சோபிக்கிறதைப் பார்க்கிறோமல்லவா?

நல்ல வேளையாக நமது மாயவரம் கிருஷ்ணையர் திருவாங்கூருக்குப் போகாமல் மயிலாப்பூரிலேயே இருந்து விட்டார். அதனால் அவருக்கு எவ்வளவு நன்மை தெரியுமா? திருவாங்கூரிலிருந்து திரும்பி வரவேண்டிய சிரமம் இப்போது இல்லாமற் போய்விட்ட தல்லவா?

"கருடா! சுகமா?" என்று கேட்டதற்கு, "அவரவர்களும் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் சுகந்தான்!" என்று கருடன் பதில் சொல்லிற்றாம்! மாயவரம் கிருஷ்ணையர் மேற்படி உண்மையைத் தெரிந்துகொண்டு மயிலாப்பூரிலேயே தங்கியிருந்து கர்நாடக சங்கீதக் கொடியை நிலைநாட்டி வருகிறார்.

இதுவரையில் அவர் அதிகமாகச் சங்கீதக் கச்சேரிகளுக்குப் போவது கிடையாது. "இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டேன். "ஒருவரும் கூப்பிடாததுதான்!" என்று மாயவரம் கிருஷ்ணையர் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டுச் சிரித்தார். "ஏதாவது ஒரு சமஸ்தானத்தின் சமஸ்தான வித்வான் ஆகிறதுதானே?" என்று கேட்டேன்.

"நான் சுதந்திர இந்தியாவில் ஜனநாயக சமஸ்தான வித்வானாகத்தான் இருப்பேன்!" என்று ஒரே பிடிவாதமாகச்

சொன்னார். அவருடைய மேற்படி கொள்கைக்கு இணங்க சென்ற 7-9-47ல் சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் கோகலே மண்டபத்தில் கச்சேரி செய்தார்.

தமிழிசை ஆயிற்றே என்று சங்கோசப்பட்டுக் கொண்டோ, ஆகாசத்தையும் பூமியையும் பார்த்துக் கொண்டோ பாடவில்லை.

தமிழ் நாட்டில் தமிழிசை பாடுகிறேன் என்ற பெருமிதத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கம்பீரமாகப் பாடினார்.

“தத்துவ மறிய தரமா? மூலாதார கணபதே!” என்று ரீதி கௌளையில் கணபதியைக் கேட்டதற்கு, மூலாதார கணபதி சபையிலிருந்த ரஸிகர்களின் மூலம் “பேஷ்! சபாஷ்!” என்று பதில் சொன்னார்.



மாயவரம் கிருஷ்ணையர்

பின்னர், வித்வான் “வண்டாடும் சோலையில்” உலாவிக்கொண்டு வந்து, “மாதவன் மதுரை மைந்தன் மறைநகர் பரவும் மாடனை” அழகான நிரவல் மூலம் உரிமைப் படுத்திக் கொண்டார்.

தோடி ராகத்தை மாயவரம் கிருஷ்ணையர் ஆலாபனம் செய்தபோது, தோடி ராகம் ஓடிவந்து வித்வானுக்கு ஒரு கோடி நமஸ்காரம் செய்தது. “இந்த மட்டும் என்னை உருத் தெரியாதபடி அடிக்காமல் ஆலாபனை செய்யத் தாங்கள் ஒருவர் இருக்கிறீர்களே?” என்று வந்தனோபசாரமும் அளித்தது. இதனால் மேலும் உற்சாகமடைந்த வித்வான் “ஆனந்தமே பரமானந்தமே!” என்று காம்போதி ராகத்தில் பிரமானந்தமாகப் பாடினார்.

முக்கிய ராக ஆலாபனைக்கு எடுத்துக் கொண்ட கல்யாணி கடல் மடை திறந்தது போல் வெள்ளமாகப் பொங்கியது.

பல்லவிக்குப் பிறகு “[illegible]” என்னும் திருவாசகப் பாடலைக் கரகரப்பிரியா முதலிய பல ராகங்களில் தொகுத்து மாலையாக்கிச் சிவபெருமானுக்குச் சூட்டினார். அன்று ஒருநாள் சிவபெருமான் தமது நாகாபரணத்தை உதறித் தள்ளிவிட்டு ராகாபரணத்தைப் பூண்டிருப்பார் என்றே நினைக்கிறேன்.

“இவர் யார் மாயவரம் கிருஷ்ணையர்? புதிய பெயரா யிருக்கிறதே?” என்று எண்ணித் தயங்கித் தயங்கிக் கோகலே ஹாலுக்குள் வந்த சங்கீத ரஸிகர்கள், கச்சேரி முடியும் வரையில் இருந்து, “வாழிய செந்தமிழ்” பாடிய பிறகு கரகோஷத்தின் மூலம் தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டுவிட்டுக் குதூகலமாக வெளியேறினார்கள்.

மாயவரம் கிருஷ்ணையரிடம் உயர்ந்த சங்கீத வித்தை யிருக்கிறது. சாஹித்யத்தைத் தெளிவாகச் சொல்லி அழுத்தமாகப் பாடும் ஆற்றல் இருக்கிறது. நல்ல சுகபாவமுள்ள சாரீரம் இருக்கிறது. சபையை ரஞ்சிக்கச் செய்யும் வழிகளும் தெரிந்திருக்கிறது. உருப்படிகளின் பாடம் நிறைய இருக்கிறது. தமிழிலேயே அதுவரை கேட்டிராத புதிய கீர்த்தனங்கள் சில பாடினார் என்றால், மற்றத் தியாகராஜர் தீக்ஷிதர் உருப்படிகள் எத்தனையோ தெரிந்திருக்கும் என்பதில் ஐயம் என்ன?

பின்னே, மாயவரம் கிருஷ்ணையருக்கு வேண்டியது என்ன என்றால், கச்சேரிகள் நிறைய வேண்டும்; கச்சேரிகள் நிறையச் செய்து, கச்சேரி பந்தாவும் பாணியும் உருவாக வேண்டும்; அதன் மூலம் உற்சாகமும் கற்பனையும் பெருக வேண்டும்.

கர்நாடக சங்கீதத்துக்கு நல்ல அதிர்ஷ்டம் இருந்தால், நிறையக் கச்சேரி செய்யும் வசதிகள் ஸ்ரீ கிருஷ்ணையரைத் தேடிக் கொண்டு வரும். ஏனெனில், கச்சேரிகளைத் தாம் தேடிக்கொண்டு போகிறவராக மாயவரம் கிருஷ்ணையர் காணப்படவில்லை.

• • •

ஸ்ரீ கிருஷ்ணன் என்னும் இளம் வித்வான் மேற்படி கச்சேரியில் பிடில் வாசித்தார். நாகர்கோவில் கணேசன் மிருதங்கமும், திருவல்லிக்கேணி ராமா

மிர்தம் கஞ்சிராவும் வாசித்தார்கள். கஞ்சிராவை அபூர்வ மதுர பாவத்துடன் கையாண்ட காலஞ் சென்ற ஸ்ரீ வேணு நாயக்கரின் மருமகர் ஸ்ரீ ராமாமிர்தம். பல வருஷங்களுக்கு பின்னால் பிரஸிடென்ஸி கலாசாலையில் நடந்து பிரசித்தி பெற்ற "கட்டை வண்டி" நாடகத்தில் கதாநாயகனாக நடித்துப் பெயர் வாங்கியவர். ஸ்ரீ வேணு நாயக்கருடைய மதுரத் தொனி ஸ்ரீ ராமாமிர்தத்தின் கஞ்சிராவிலும் கேட்கிறது. கஞ்சிராவை நன்குக் கையாளுகிறவர்கள் அருகிப்போன இந்தக் காலத்தில் ஸ்ரீ ராமாமிர்தம் அந்த வித்தையில் சிறந்தோங்குவார் என்று நம்புகிறேன்.

★ ★ ★

"கவிக் குயில் பாரதி" யாரைப் பற்றி இந்தக் காலத்துக் கானமேகமாய் விளங்கும் ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடிய "கனவு பலித்ததடி" என்னும் கீர்த்தனமும், "பூரணமான சுதந்திரம் பெற்றோம்" என்னும் ராகமாலிகையும் ஸ்ரீ என். ஸி. வசந்தகோகிலம் அவர்களால் பாடப்பட்டு, எச். எம். வி. கம்பெனியால் N. 18839 இசைத்தட்டாக வெளியிடப்பட்டிருக்கின்றன. "கனவு பலித்ததடி" கீர்த்தனம் செஞ்சுருட்டி ராகத்தில் ஸ்ரீ வசந்தகோகிலத்தின் இனிமையான குரலில் சோகச் சுவையுடன் அமைந்திருக்கிறது. "நமது சுதந்திரக் கனவு பலித்ததைப் பார்க்கப் பாரதியார் இங்கு இல்லையே?" என்ற ஏக்கம் பாட்டின் மெட்டிலும் பாடகியின் குரலிலும் தொனிக்கிறது.

"பூரணமான சுதந்திரம் பெற்றோம்" என்ற விருத்தம் பொருத்தமான ராகங்களில் கம்பீரமாகவும் குதூகலமாகவும் பாடப் பெற்றிருக்கிறது.

செப்டம்பர் 11உ மகா கவி பாரதி தினத்தை யொட்டி பாரதியார் இசையைக் கூறும் மேற்படி இசைத் தட்டை வெளியிட்டதன் பொருட்டு எச். எம். வி. கம்பெனியைப் பாராட்டுகிறோம்.

இராம கதை கேளுங்கள்!

"இராமாயணத்தைப் போன்ற காவியமும் இல்லை; வால்மீகியைப் போன்ற வடமொழிக் கவியும் இல்லை" என்பது பிரசித்தமானது. அத்தகைய வால்மீகி ராமாயண சுலோகங்களை இசையோடு சொல்லி, ரஸமாகவும் ரஞ்சகமாகவும் உபந்நியாசம் செய்தவர்கள் சென்ற தலைமுறையில் நமது நாட்டில் பலர் இருந்தார்கள். இப்போது சிலர்தான் இருக்கிறார்கள். இவர்களில் சுவாமிமலை பிரம்மஸ்ரீ சாம்பமூர்த்தி பாகவதர் அவர்கள் இப்போது மயிலாப்பூரில் தங்கி வால்மீகி இராமாயண உபந்நியாசங்களைப் பொழிந்து வருகிறார். சம்ஸ்கிருதம் அறியாதவர்களுக்குக் கூட விளங்கும்படியாக சுலோகங்களைத் தெளிவுடன் சொல்கிறார். இராமாயணத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் அற்புதமான குணசித்திரங்கள் தருகிறார். இடையிடையே சோழநாட்டுக்கு இயல்பான ஹாஸ்ய வெடிகளைப் போட்டுச் சபையோரைக் 'குபீர்' என்று சிரிக்கப் பண்ணுகிறார். இவருடைய உபந்நியாசங்களைக் கேட்கும்போது "பகவான் மனிதர்களுக்கு லோபித்தனமாக நூறு வயது தானே கொடுத்திருக்கிறார்? ஆயிரம் வயது கொடுத்திருக்கக் கூடாதா?" என்று தோன்றுகிறது. கொடுத்த நூறு வயதாவது நிச்சயம் வாழ்ந்து இத்தகைய இராமாயண உபந்நியாசங்களை மேலும் மேலும் கேட்க விருப்பம் உண்டாகிறது.



பாரதி மண்டப நிதி

பாரதி மண்டபத் திருப்பணி தமிழ் மக்களின் பேருதவியினால் பூரணமாகி விட்டது. திறப்பு விழாத் தேதி நெருங்கிக் கொண்டே வருகிறது. தேதி நெருங்க நெருங்க, தேச மகா கவியின் பெருமைக்கும் பாரதி மண்டபத்தின் அழகுக்கும் உகந்தபடி திறப்பு விழாவும் சிறப்பாக நடைபெறவேண்டுமே என்ற கவலையும் பொறுப்பு உணர்ச்சியும் அதிகமாகி வருகின்றன.

நல்ல வேளையாகத் திருவிழா நடத்தும் பெரிய பாரத்தைத் திருநெல்வேலி ஜில்லாப் பிரமுகர்கள் அடங்கிய வரவேற்புக் கமிட்டியார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நன்றாயிருக்கவேணும்! அவர்கள் எல்லாரும் இந்த நாட்டு மன்னர்களாக வாழ்ந்து செழிக்கவேணும்!

செப்டம்பர் 14உ வரவேற்புக் கமிட்டியின் இரண்டாவது கூட்டம் எட்டயபுரத்தில் கூடியது. மண்டபத்துக்கு முன்னால் கொட்டாரப் பந்தல் போடக் கால் நாட்டு வைபவம் நடந்தது. மற்றத் திருவிழா ஏற்பாடுகளும் தீர்மானிக்கப்பட்டன.

வரவேற்புக் கமிட்டியார் திருவிழாச் செலவுக்கு பட்ஜெட் அனுப்பியிருக்கிறார்கள். உத்தேசச் செலவுத் தொகையின் மொத்தத்தைப் பார்த்ததும் எனக்கு மூர்ச்சை போடும்போல ஆகிவிட்டது! ஆயினும், "பணம் கொடுப்பதற்குத் தமிழ் மக்கள்—மகாராஜர்கள் — இருக்கிறார்கள்! நமக்கு என் கவலை?" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

மொத்தம் திருவிழாவுக்கு வேண்டிய தொகையைச் சொல்லுவதற்கே பயமாயிருக்கிறது. எனவே, கிடைத்துள்ள தொகையை மட்டும் சொல்கிறேன்.

எட்டயபுரம் மகாராஜா ரூ. 3000 தருவதாக வாக்களித்திருக்கிறார் அல்லவா? செட்டி நாட்டுக் குமார ராஜா ஸ்ரீ முத்தையாச் செட்டியார் திருவிழாச் செலவுக்கு என்று ரூபாய் ஆயிரம் அனுப்பியிருக்கிறார்.

ஏற்கெனவே நவாப் ராஜமாணிக்கம் கொடுத்திருக்கும் ரூ. 1951 இருக்கிறது.

அவ்வளவுதான்; பாக்கித் தொகை முழுதும் இனிமேல்தான் வரவேண்டும். தானே வந்துவிடுகிறது! கவலை என்ன? பாரதி மண்டபம் கட்டுவதற்குப் பணம் வந்து குவியவில்லையா?

வரவேற்புக் கமிட்டியார் மிகவும் பொறுப்பு வாய்ந்த அன்பர்கள். திருவிழாச் செலவுக்குப் பணம் வசூலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு வெற்றியும் வாழ்த்தும் கூறுகிறேன். தமிழ் மக்களின் பேராதரவையும் கோருகிறேன். திருவிழாவின் செலவுக்கென்று "கல்கி" மானேஜருக்குப் பணம் அனுப்பி வைத்தாலும் வரவேற்புக் கமிட்டிக்குச் சேர்ப்பித்து விடச் சித்தமாயிருக்கிறார்.

சென்ற முறை அஸ்திவாரத் திருவிழாச் செலவுக்கென்று டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகம் நடத்திப் பணம் கொடுத்தது ஞாபகம் வருகிறது.

நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியையும், டி. கே. எஸ். கம்பெனியையும் போல் இன்னும் பல நாடக சபைகள் தமிழ் நாட்டில் இருக்கத்தானே செய்கின்றன?

• • •

பாரதி மண்டப நிதியின் ஜாபிதாவில் இந்தத் தடவை திருப்புகழ் மணியின் நன்கொடையைக் காணலாம். பரமபக்த சிரோமணியான அப்பெரியார் அனுப்பிய நூறு ரூபாய் மூலதனத்தைக் கொண்டு "கல்கி" பத்திரிகை இத்தனை வளர்ச்சியடைந்திருக்கிறது! பாரதி மண்டபத்துக்கு நூறு ரூபாயும் ஒன்றும் அனுப்பியிருக்கிறார்கள்! பாரதி மண்டபத்தின் நிழலில் எவ்வளவோ அரும் பெரும் தமிழ்த் தொண்டுகள் நடக்கப் போகின்றன என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

தமிழ் மந்திரிமார்கள் நால்வருடைய பெயர்களை இந்த இதழ் ஜாபிதாவில் காணலாம். ஏற்கெனவே பிரதம மந்திரியும் மராமத்து இலாகா மந்திரியும் நன்கொடை அளித்திருக்கிறார்கள். ஆகவே, தமிழ் மந்திரிகள் எல்லாரும் பாரதி மண்டபத்துக்குக் காணிக்கை செலுத்திவிட்டார்கள். வாழ்க மந்திரிகள்! தீர்க உணவுப் பஞ்சம்!

டாக்டர் பி. சுப்பராயன், போலீஸ் மந்திரி, சென்னை	101	0	0
டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் உணவு மந்திரி, சென்னை	101	0	0
ஸ்ரீ டேனியல் தாமஸ், மது விலக்கு மந்திரி, சென்னை	101	0	0

திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், சென்னை	101	0	0
ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம், கல்வி மந்திரி, சென்னை	100	0	0
ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி அய்யர், மயிலாப்பூர்	100	0	0
பாரதி மன்றம், பெரியகுளம்	133	0	0
வத்திராயிருப்பு பாரதி அன்பர்கள் (ஸ்ரீ ஆழ்வார் அய்யங்கார்—எஸ். நாராயணன் மூலம்)	62	0	0
டி. பிரிட்டோ உயர்தர கலாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பிரிட்டோநகர், தேவகோட்டை	55	0	0
வேம்பாறு உதய தாரகை சங்கம்	51	0	0
ஸ்ரீ ம. கோபால நாயக்கர், தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர், கோவில்பட்டி	50	0	0
ஹோட்டல் தொழிலாளர் சங்கம், சேலம்	50	0	0
கோயமுத்தூர் காரினன் இன்ஜினியர்ஸ் ஆபீஸ் (ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி மூலம்)	40	0	0
நாட்டரசன் கோட்டை பாரதி அபிமானிகள் (ஸ்ரீ சதாசிவன் மூலம்)	30	0	0
அம்பரநாத் தமிழ்ச் சங்கம் (ஸ்ரீ ராஜு முதலியார் மூலம்)	30	0	0
பள்ளிப்பாளையம் கோ ஆபரேடிவ் ஸ்டோர் அன்பர்கள் (ஸ்ரீ பி. என். சுப்ரமணியம் மூலம்)	28	0	0
மணக்கால் ஸ்ரீ ரங்கராஜன், சங்கீத வித்வான், சென்னை	25	0	0
சேலம் அம்மாபேட்டைவாசிகள் (ஸ்ரீ கே. பி. டி. சிவராமன் மூலம்)	24	0	0
ஸ்ரீ எஸ். ஆர். சேஷய்யர், எம். எஸ். எம். ரயில்வே, சென்னை	22	8	0
வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம், வள்ளியூர்	21	14	0
ஸ்ரீ வெ. நாராயணன், ஆசிரியர், ''புத்துயிர்'', சென்னை	21	0	0
ஸ்ரீ எஸ். கே. ராமனுஜன், திருநெல்வேலி	21	0	0
வாணரமுட்டி காங்கிரஸ் கமிட்டி (ஸ்ரீ கே. பெருமாள் ரெட்டியார் மூலம்)	21	0	0
தேசிய வாலிபர் சங்கம், புதுப்பேட்டை, குமாரபாளையம்	17	0	0
சென்னை எம். ஸி. டி. முத்தையா செட்டியார் உயர்தர பாடசாலை ஆசிரியர்கள்	17	0	0
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, நுங்கம்பாக்கம், சென்னை	15	0	0
ஸ்ரீ நடராஜா கல்விக் கழகம், திருவல்லிக்கேணி	12	0	6
குமாரி ராஜலக்ஷ்மியும் சகோதர சகோதரிகளும், மைசூர்	12	0	0
ஹோட்டல் தொழிலாளர் சங்கம், கோவில்பட்டி (காரியதரிசி ஸ்ரீ வி. ராமநாதன் மூலம்)	11	12	0
ஸ்ரீ வீர சிவசுப்ரமணியம், குலசேகரப்பட்டணம்	11	0	0
ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பாகவதர், தஞ்சை	11	0	0
ஸ்ரீ கே. ராமசாமித் தேவர், குவயிட். பர்னியன் கம்ப்	10	0	0
ஸ்ரீ டி. வீரபாகு பிள்ளை, விருத்தாசலம்	10	0	0
ஸ்ரீ கோபால், இரான்	10	0	0
ஸ்ரீ சோம. நாச்சியப்பன், கின்னான், மலேயா	10	0	0
ஸ்ரீ ஏ. கே. காளியப்ப செட்டியார் அண்டு சன்ஸ், எர்ணாகுளம்	10	0	0
பாரதி அபிமானி, சென்னை	10	0	0
பாரதி சங்கம், திருவனந்தபுரம்	10	0	0
ஜனாப் ஏ. எம். எம். இப்ராஹிம், செந்தூரம், கோலாலம்பூர்	9	15	0
ராஜாஜி வாலிபர் சங்கம், திரளி	5	2	0
ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி, அட்வகேட், சென்னை	5	0	0
ஸ்ரீமதி வி. அனந்தலக்ஷ்மி அம்மாள், பாகனேரி	5	0	0
ஸ்ரீ என். ஏ. ஸ்ரீநிவாஸன், பெங்களூர்	5	0	0
ஸ்ரீ கே. எம். மாமுண்டி நல்லையன், சின்னமனூர்	5	0	0
ஸ்ரீ ஆர். ஆர். ஆதித்தன், காயாமொழி, திருச்செந்தூர்	5	0	0
ஸ்ரீமதி ஸாவேரி பாலசுப்ரமணியம், புதுக்கோட்டை	5	0	0
ஸ்ரீ ஏ. குப்புசாமி அய்யங்கார், மானாமதுரை	5	0	0
ஸ்ரீ வி. லெக்ஷ்மண ராவ், ஈரோடு	5	0	0
ஸ்ரீ கே. குப்புசாமி, தாராபுரம்	5	0	0
ஸ்ரீ ஆர். ஏ. நல்லதம்பி செட்டியார், மோகனூர்	5	0	0
ஸ்ரீ ஆர். நாராயணஸ்வாமி, கல்கி ஏஜெண்ட், பொள்ளாச்சி	5	0	0
முனிஸிபல் பிஸ் கலெக்டர் அபோராணிவேலன், திருச்சி	5	0	0
ஸ்ரீ பாரதி வாலிபர் சங்கம், இளையான்குடி	5	0	0
ஸ்ரீ வி. எஸ். செல்லம், ஆரமங்கலம், மலபார்	5	0	0
ஸ்ரீ வி. எச். சுப்பய்யா, கல்கி ஏஜெண்ட், அறந்தாங்கி	5	0	0
ஸ்ரீ எம். தியாகராஜன், திருச்சி	5	0	0
நேதாஜி வாலிபர் சங்கம், தொட்டியம்	5	0	0
ஸ்ரீ வி. ராஜகோபாலன், அரக்கோணம்	5	0	0
வைத்தியபாஸ்கர ஸ்ரீ ஜி. கந்தசாமி ராஜு, பூவாளூர்	5	0	0
ஸ்ரீ பி. வி. காமேஸ்வரய்யர், வத்திராயிருப்பு	5	0	0
ஸ்ரீ என். நடராஜ முதலியார், கல்கி ஏஜெண்ட், ஸ்ரீவில்லிபுத்தூர்	5	0	0
ஸ்ரீ சாது. கே. குருசாமி நாயக்கர், வடுகர் கோட்டை, அருப்புக்கோட்டை	5	0	0
மௌன்ஸ் கிருஷ்ணா அண்டு கோ., நன்னிலம்	5	0	0
ஸ்ரீமதி கமலா சுப்பிரமணியம், குலசேகரப்பட்டணம்	5	0	0
ஸ்ரீ கே. எஸ். நாகராஜன், நெடுங்குளம், சேலம்	5	0	0
கம்மாபுரம் போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் மாணவர்கள் (ஸ்ரீ ஆர். நடேசன் மூலம்)	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட வரும்	8	3	0
(அருப்புக்கோட்டை ஸ்ரீ ராயர் மூலம் வரவு ரூ. 134 0 0-க்கு விபரம்:)			
கைத்தறி நெசவாளர்கள், அருப்புக்கோட்டை	40	0	0
புரோப்ரைட்டர்ஸ், ராஜா டிரான்ஸ்போர்ட், அருப்புக்கோட்டை	25	0	0
அருப்புக்கோட்டை நகர காங்கிரஸ் கமிட்டி	20	0	0
பி. சந்திரசேகரன் செட்டியார், அருப்புக்கோட்டை	15	0	0

ஸ்ரீ க. பி. கனகய்யா, நூல் வியாபாரிகள் சங்கம், அருப்புக்கோட்டை	10	0	0
ஸ்ரீ பி. எஸ். ராமசாமி நாயுடு, பந்தல்குடி	10	0	0
ஸ்ரீ டி. பொன்னுச்சாமி அய்யங்கார், அருப்புக்கோட்டை	5	0	0
ஸ்ரீ ஏ.வி. திருப்பதி செட்டியார், அருப்புக்கோட்டை	5	0	0
ஐந்து ரூபாய்க் குட்பட்ட நன்கொடைகள்	4	0	0
(சேலம் பி. ஸ்ரீ. அன்டு கோ ஸ்ரீ வி. திருமலைசாமி மூலம் வரவு ரூ. 112க்கு விவரம்)			
ஸ்ரீ வி. திருமலைசாமி, சேலம்	11	0	0
ஸ்ரீ கூப்சந்து சந்தன்தாஸ்	11	0	0
ஸ்ரீ டி. ராமசாமி, சேலம்	5	0	0
ஸ்ரீ எம். ராமசாமி, சேலம்	5	0	0
ஸ்ரீ எம். வி. கிருஷ்ணய்யர்	5	0	0
ஸ்ரீ கே. வி. கிருஷ்ணய்யர்	5	0	0
ஸ்ரீ கே. வி. ராமசாமி அய்யர்	5	0	0
ஸ்ரீ எம். ஆர். கங்காராம், சேலம்	5	0	0
ஸ்ரீ பி. எச். இந்துமல், சேலம்	5	0	0
ஸ்ரீ எஸ். எம். ஆறுமுகம், அம்மாபேட்டை	5	0	0
ஸ்ரீ எஸ். என். அங்கப்ப முதலியார், அம்மாபேட்டை	5	0	0
ஸ்ரீ எம். வெங்கடாசல முதலியார், அம்மாபேட்டை	5	0	0
ஸ்ரீ வி. தம்பு செட்டியார், அம்மாபேட்டை	5	0	0
ஸ்ரீ பி. மாரியப்ப முதலியார், அம்மாபேட்டை	5	0	0
ஸ்ரீ சி. ஜி. பாலகிருஷ்ணன், செவ்வாய்ப்பேட்டை	5	0	0
ஸ்ரீ பி.பி. நடராஜ செட்டியார், செவ்வாய்ப்பேட்டை	5	0	0
ஸ்ரீ எஸ். ராமசாமி செட்டியார், செவ்வாய்ப்பேட்டை	5	0	0
ஸ்ரீ எஸ். கே. பூர்ணையா செட்டியார், செவ்வாய்ப்பேட்டை	5	0	0
ஸ்ரீ எம். எஸ். ஸ்ரீநிவாசன், செவ்வாய்ப்பேட்டை	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடை	5	0	0
(ஸ்ரீ எம். மாணிக்கம், சவுக், பர்மா மூலம் வரவு ரூ. 105க்கு விபரம்)			
ஸ்ரீ மார்லின் பெல்லன், சவுக்	15	0	0
ஸ்ரீ சி. டி. மாத்யூஸ், சவுக்	10	0	0
ஸ்ரீ கே. மேனன், சவுக்	10	0	0
ஸ்ரீ ஆர். எஸ். மணி சவுக்	10	0	0
ஸ்ரீ எஸ். மாணிக்கம், சவுக்	10	0	0
ஸ்ரீ டாக்டர் சந்திரன் சவே	10	0	0
டாக்டர் மார்ட்டின் சவுக்	10	0	0
ஸ்ரீ ஆதி ரவிகுஞ்சரம், சவே	5	0	0
ஸ்ரீ ஜே. வா. சரன், சவுக்	5	0	0
ஸ்ரீ வி. எம். பொன்னைய்ய செட்டியார், சவுக்	5	0	0
ஸ்ரீ க. அழ. உடையப்ப செட்டியார், சவுக்	5	0	0
ஸ்ரீ அரு. நாகலிங்கம், சவுக்	5	0	0
ஸ்ரீ டி. துரைசாமி, சவுக்	5	0	0
(பரமக்குடி ஸ்ரீ ஜி. கோவிந்தன் மூலம் ரூ. 85-4-0-க்கு விவரம்:)			
ஸ்ரீ வி. காசிவிஸ்வநாதம் பிள்ளை, பரமக்குடி	20	0	0
காளிதாஸ் லைகல் உபாத்தியாயர்கள், பரமக்குடி	9	0	0
ஸ்விடன் மிஷின் (போர்டிங்) உபாத்தியாயர்கள்	7	0	0
ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரமய்யர், பரமக்குடி	5	0	0
ஸ்ரீ பி. எஸ். சாமிநாத பிள்ளை, பரமக்குடி	5	0	0
ஸ்ரீ எஸ். எம். சுந்தரராஜன், பரமக்குடி	5	0	0
மின்கலெக்டர் சங்கம், பரமக்குடி	5	0	0
ஸ்ரீ எம். ஏ. கே. டி. சண்முகசுந்தரம் செட்டியார், பரமக்குடி	5	0	0
ஸ்ரீ கே. ஆர். நரசிம்ம பயில்வான், பரமக்குடி	5	0	0
ராமலிங்க விலாஸ் உபாத்தியாயர்கள், பரமக்குடி	5	0	0
ஸ்ரீ வி. கே. ராஜு, பரமக்குடி	5	0	0
முஸ்லிம் மேலத் தெரு — கீழத்தெரு ஆஞ்சநேய உபாத்தியாயர்கள், பரமக்குடி	5	0	0
இதர வரவும்	4	4	0
(தூத்துக்குடி ஸ்ரீ ஏ. பி. வி. வீரபாகுப் பிள்ளை மூலம் வரவு ரூ. 75-க்கு விவரம்:)			
ஸ்ரீ எஸ். பி. சண்முகம் பிள்ளை, ஆ. ப. சத்திரம்	50	0	0
ஸ்ரீ ஜெகம் சௌந்திரமுத்து	25	0	0
(மாயவரம் 'கணபதி-வாசுமதி' திருமணத்தில் பாரதி மண்டப நிதிக்காகத் தில்லையாடி வித்வான் ஸ்ரீ வி. சிவராமன் கச்சேரியின் வசூல் ரூ. 56க்கு விவரம்)			
ஸ்ரீ ஆர். ராதாகிருஷ்ணன், கே. ஆர். அண் சன்ஸ், கோபாலசமுத்திரம்	11	0	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பிள்ளை, வெங்காய வியாபாரம், நாகப்பட்டணம்	11	0	0
ஸ்ரீ அ. அய்யாசாமி நயினார், இரும்பு வியாபாரம், மாயவரம்	5	0	0
ஸ்ரீ ராமசாமி நாயக்கர், மிராசுதார், கொரடாச்சேரி	5	0	0
ஐந்து ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்	24	0	0
(கோவில்பட்டி ஸ்ரீ எம். ஷண்முகம் பிள்ளை மூலம் ரூ. 42-க்கு விவரம்)			
போர்டு உயர் பாடசாலை ஆசிரியர் சங்கம், கோவில்பட்டி	15	0	0
ஸ்ரீ ஏ. வி. வெங்கடராம நாயுடு, கோவில்பட்டி	10	0	0
ஸ்ரீ என். என். குருசாமி அய்யர், கோவில்பட்டி	6	0	0
ஸ்ரீ நா. த. த. கணபதி செட்டியார், மளிகைக்கு வியாபாரம்	6	0	0
ஸ்ரீ வ. ச. அ. சண்முக நாடார், கடம்பூர்	5	0	0
(கொழும்பு ஸ்ரீ. எஸ். ஆர். கந்தசாமி மூலம் வரவு ரூ. 35க்கு விவரம்)			
ஸ்ரீ. க. பெ. இளையபெருமாள் கொழும்பு	5	0	0
ஸ்ரீ க. ரா. கந்தசாமி, கொழும்பு	5	0	0
ஸ்ரீ சி. சந்தியப்பெருமாள், கொழும்பு	5	0	0
ஸ்ரீ க. ராமக்கனி, கொழும்பு	5	0	0
ஸ்ரீ உ. செல்லையா, கொழும்பு	5	0	0
ஸ்ரீ க. ரா. வேல், கொழும்பு	5	0	0
ஸ்ரீ பி. கே. எஸ். எஸ். கந்தசாமி நாடார் அண் கோ, கொழும்பு	5	0	0
ஆக ரூ.	2263	10	6
ஏற்கெனவே வசூல் ரூ.	22,637	1	6
ஆக மொத்தம் ரூ.	24 900	12	0

முத்தொள்ளாயிரம்

யானையின் காதை அவ்வளவு அழகான உறுப்பு என்று சொல்ல முடியுமா? அதனுடைய காலைத்தான் அவ்வளவு அழகென்று வர்ணிக்க முடியுமா? யானையின் துதிக்கை, வாய் இவற்றின் இலட்சணத்தைப் பற்றியும் அதிகமாகப் புகழ்ந்து பேசுவதற்கில்லை.

ஆயினும் பழந்தமிழ் நாட்டு மன்னன் ஒருவன் பட்டத்து யானையின்மீது ஏறிப் பவனி வரும்போது, அந்த யானைக்குத் தனி அழகு ஒன்று எங்கிருந்தோ வந்து விடுகிறது! அதன் கண்கள், காதுகள், துதிக்கை, வாய் எல்லாமே அழகு பெற்றுத் தோன்றுகின்றன. அதிலும் முக்கியமாக ஊரிலுள்ள கன்னிப் பெண்களின் கண்ணுக்கு அரசனைச் சுமந்து கொண்டு பவனி வரும் யானை சௌந்தரிய வடிவமாகவே தோன்றி விடுகிறது.

பாண்டிய மன்னனின் பட்டத்து யானை ஒருநாள் நதியில் குளித்துக் கொண்டிருந்தது. யானைப்பாகன் அதைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான். ஒரு கன்னிப் பெண் குளிப்பதற்காக நதிக்கு வந்தாள். யானை குளிப்பாட்டப்படுவதைப் பார்த்தாள். அது பாண்டியனுடைய யானை என்பது தெரிந்துபோய் விட்டது. அந்த யானையிடம் ஒரு விண்ணப்பம் போட்டு வைக்க வேண்டும் என்று அந்தக் கன்னிப் பெண் எண்ணினாள். விண்ணப்பத்தின் ஆரம்பத்தில், யாருக்கு விண்ணப்பம் போடுகிறோமோ அவரைப் பற்றி வானளாவப் புகழ்வது மரபல்லவா? சாதாரண மனிதனைக்கூட 'மகா ராஜ ராஜஸ்ரீ' ஆகவும், தர்மதுரையாகவும், இந்திரனாகவும் சந்திரனாகவும் புகழ்ந்து விடுகிறோமல்லவா? எனவே, யானையைப் புகழ்கிறாள் அந்தப் பெண்! அதன் அழகை வர்ணிக்கிறாள்! "ஆகா! உன் காலே கால்! அது வெறும் காலாகவா இருக்கிறது? உரலைப் போல இல்லவா? இருக்கிறது? உன் காதோ கேடயம் போலத் தோன்று



கிறது! உன் துதிக்கை, வாய், — இவற்றின் அழகைத்தான் என்னவென்று சொல்வேன்? அதை வர்ணிக்க முடியுமா? முடியாது!"—இப்படியெல்லாம் யானையை வர்ணித்துவிட்டு விஷயத்துக்கு வருகிறாள். "ஏ அழகான யானையே! எனக்காக ஒரு காரியம் செய். பிரமாதம் ஒன்றுமில்லை; சின்னக் காரியந்தான். பாண்டிய ராஜனை உன் முதுகின்மேல் ஏற்றிக் கொண்டு வீதி வலம்வரும் போது என் வீட்டைக் கடந்து போவாயல்லவா? அச்சமயம் என் வீட்டுப் பலகணியின் ஓரமாக, வீட்டுச் சுவரில் உராய்ந்துகொண்டு போ! பாண்டிய மன்னனை ஒரு கணமாவது என் கண் குளிரப் பக்கத்தில் நின்று பார்க்கிறேன்! பாண்டியன் அணிந்துள்ள பூமாலையின் நறுமணத்தையும் கொஞ்சம் அநுபவிக்கிறேன்!" என்று யானையைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறாள். இத்தகைய கருத்தையுடைய முத்தொள்ளாயிர வெண்பா பின்வருமாறு:—

> ஆடியடி தோல்செவி
> தூங்குகை நால்வாய்ப்
> பிடியே! யான் நின்னை
> இரப்பல் — கடிகமழ்தார்ச்
> சேலேக வண்ணனொடு
> சேரிபுகுதலும், எம்
> சாலேகம் சார
> நட!

[சேலேக வண்ணன்: சந்தனமணிந்த பாண்டியன்; சேரி: ஊர்; சாலேகம்: பலகணி அதாவது ஜன்னல்.]

* * *

பழந்தமிழ்க் கவிகள் எந்த விஷயத்தையும் நாடக ரூபத்தில் கொண்டு வந்து சொல்லுவதில் பற்று உடையவர்கள். "பாண்டியன் பட்டத்து யானைமீதேறிப் பவனி வந்தான்; அவனை ஊரில் உள்ள கன்னிப் பெண்கள் ஆவலோடு பார்த்தார்கள்; 'இந்த மகா ராஜனை மணந்து கொள்வதற்கு எந்தமகராஜி கொடுத்து வைத்திருக்கிறாளோ?' என்று

எண்ணிப் பெருமூச்சு விட்டார்கள் !'' என்று அப்பட்டமாக விஷயத்தைச் சொல்ல மாட்டார்கள். "யானை குளத்தில் குளித்தது; அதை ஒரு கன்னிப் பெண் பார்த்தாள்" என்று ஒரு நாடகக் கட்டத்தைக் கற்பனை செய்வார்கள். பெண், யானையைப் பார்த்துச் சொன்னதாகக் கவி எழுதுவார்கள். கவி கற்பனை செய்து கொண்ட நாடகக் கட்டத்தை நாமும் கற்பனை செய்து கொள்ள வேண்டும். அப்படிக் கற்பனை செய்து கொண்டு பார்த்தால்தான் கவிதையின் பொருளும் அழகும் நன்கு விளங்கும். கவிதை கவிதையாகத் தோன்றும்.

* * *

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் செந்தமிழ் நாட்டில் ஒரு மகா கவி இருந்தார். அப்போது சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழகத்தை அரசு புரிந்து வந்தார்கள். இப்போது மலையாளம் அல்லது கேரளம் என்று சொல்லப்படும் நாட்டுப் பகுதி அப்போது தமிழகத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. அந்த நாட்டில் உள்ளவர்களும் தமிழ் பேசுந் தமிழர்களாகவே இருந்தார்கள்.

அந்த மகா கவி பாண்டிய மன்னனின் பெருமையையும் பாண்டிய நாட்டின் வளத்தையும் அழகையும் பற்றி 900 கவிகள் பாடினார். இந்தப் பாடல்களைக் காதல் துறையில் வைத்து நாடகக் கட்டங்களாக்கியும் பாடினார்; தெய்விகமான கடவுள் உண்மையைப் புலப்படுத்தும் வகையிலும் பாடினார்.

அவருடைய பாட்டின் பெருமை தமிழகமெங்கும் பரவியது. சோழன் தன்னைப் பற்றியும் அத்தகைய பாடல்கள் பாட வேண்டுமென்று கவிஞரை அழைத்தான். கவிஞர் அவ்விதமே சோழ நாடு சென்று சோழனைப் பற்றியும் 900 வெண்பாக்கள் பாடினார். பிறகு சேர தேசம் சென்று சேர மன்னனைப் பற்றியும் அவ்விதமே 900 பாடல்கள் பாடினார்.



ஆக, அவர் மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் பாடினார். அந்தக் காலத்துத் தமிழகத்துப் பண்பாட்டையும், தமிழ் மன்னர்களின் வீரச் சிறப்பையும், தமிழர்கள் கண்ட தெய்வத்தின் உண்மையையும் விஷயமாகக் கொண்டு மேற்படி மூன்று தொள்ளாயிரம் பாடல்களையும் அவர் பாடினார்.

கவிஞரின் பெயர் என்னமோ நமக்குத் தெரியாது. அந்தக் காலத்திய தமிழ்க் கவிஞர்கள் தங்கள் பெயரைப் பற்றிக் கவலைப் படவில்லை. தாங்கள் பாடுகிற கவிதை நன்றாயிருக்க வேண்டுமென்றுதான் கவலைப்பட்டார்கள்.

முத்தொள்ளாயிரம் பாடிய கவிஞரும் அவ்விதமே தம் பெயரை எந்தப் பாட்டிலும் சேர்க்காமல், உயர்ந்த கவிதைப் பண்பு வாய்ந்த பாடல்களாக 2,700 பாடல்கள் பாடினார். துரதிர்ஷ்டவசமாக அந்தப் பாடல்களில் 99 பாடல்கள்தான் உருப்படியாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவ்வளவாவது கிடைத்தது நமது பாக்கியந்தான் என்று மகிழ்வதற்கும் இடமிருக்கிறது.

* * *

அதிர்ஷ்டவசமாகக் கிடைத்த அந்த 99 அருமையான பழந்தமிழ்க் கவிகளும் இந்த நூலில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடலும் ஒரு நாடகக் கட்டமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று மேலே சொன்னோமல்லவா? கவி கற்பனை செய்து அமைத்த அந்தக் கட்டம் இன்னது என்பதை நாமும் கற்பனை செய்து கொண்டு கவிதையைப் படித்து அநுபவிக்க வேண்டுமென்றால், அது எல்லோருக்கும் எளிதாகக் கைகூடும் காரியமல்ல. வாழ்நாளெல்லாம் கவிதை ஆராய்ச்சியில் ஈடுபட்டு, முக்கியமாகத் தமிழ்க் கவிதை ஆராய்ச்சி நடத்தி அநுபவித்துப் பண்பட்ட ஒருவருக்குத்தான் சாத்தியமானது.

மேற்கூறியவாறு தமிழ்க் கவிகளை ஆராய்ந்து அநுபவித்தவரான ரஸிக மணி டி. கே. ஸி. அவர்கள் நமக்கு அந்த நாடகக் கட்டங்களையெல்லாம் எடுத்துக் காட்டி ஒவ்வொரு பாட்டுக்கும் விளக்கம் எழுதியிருக்கிறார்கள். அரும் பதங்களுக்குப் பொருளும் தந்திருக்கிறார்கள்.

நம்மில் பெரும்பாலோருக்கு ரஸிகமணி அவர்களின் விளக்கத்தோடும் குறிப்புரைகளோடும் சேர்த்துப் படித்தால்தான் இந்தப் பழந் தமிழ்க் கவிதைச் செல்வத்தை நன்றாக அநுபவிக்க முடியும். நாமாகப் படித்துத் தெரிந்துகொள்வதென்பது அவ்வளவு எளிய காரியமன்று.

* * *

மூத்தொள்ளாயிர ஆசிரியர் சகல உலகங்களையும் படைத்த இறைவனுடைய பெருமையை எப்படி அறிந்து அநுபவித்தார் என்பதற்கு உதாரணமாக ஒரு பாடலைச் சொல்லி முடிப்போம்.

சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரம் என்று திருவாதிரையைக் குறிப்பிடுகிறார்கள். அன்று விசேஷ உற்சவங்களும் நடத்துகிறார்கள். ஆனல் நள்ளிரவில் மேகங்களால் மறைக்கப்படாத தெளிந்த வானத்தைப் பார்த்தாலோ லட்சம் பத்து லட்சம் கோடி என்று எண்ணிச் சொல்ல முடியாத நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு நட்சத்திரங்களையும் சூரியனையும் சந்திரனையும் கிரகங்களையும் படைத்தவர் இறைவன் அல்லவா? அப்படியிருக்கும்போது, "சிவபெருமான் திருவாதிரை நட்சத்திரத்துக்கு மட்டும் உரியவர் என்று சொல்வானேன்? ஆதிரையான் என்று இறைவனை விசேஷமாகப் பெயர் சூட்டி அழைப்பானேன்? உலகத்தார் இப்படிச் செய்வது என்ன வேடிக்கையான விஷயம்?" என்று நினைத்துக் கவிஞர் சிரிக்கிறார். அந்தச் சிரிப்பு பின்வரும் கவியில் கொப்புளித்துக் கொண்டு வருகிறது :—

"மன்னிய நாண்மீன்
மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த
முதல்வனைப் பின்னர்தாம்
ஆதிரையான் ஆதிரையான்
என்றென்று அயருமால்
ஊர்திரை நீர்வேலி
உலகு!"



ஆகா! திரைகடல் சூழ்ந்த இந்த உலகம் என்ன பைத்தியக்கார உலகம்! — மூத்தொள்ளாயிரம் என்னும் அற்புதத் தமிழ்க் கவிதைகளில் 2,600 கவிதைகளைக் கைசோர விட்ட தமிழ் உலகம் என்ன பைத்தியக்கார உலகம்? மீதம் கிடைத்துள்ள அரிய கவிதைகள் 99-ம் படித்துச் சுவைத்து அநுபவியாத உலகம் என்ன பைத்தியக்கார உலகம்? — என்று நமக்கும் சொல்லிச் சிரிக்கத் தோன்றுகிறது.

[வெளியிட்டவர்: தமிழ்ப்பண்ணை, தியாகராஜ நகர், சென்னை; விலை ரூ. 4-8-0.]

மதராஸ்

உங்களுக்கு மதராஸ் வேண்டுமா? வேண்டுந்தானே? சரி; சண்டை போடுகிறவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கட்டும்! நீங்கள் 'மதராஸை'த் தட்டிக் கொண்டு போய்விடுங்கள்! அதற்கு வழி சொல்கிறோம். சென்னை நகர சபைக் கமிஷனருக்கு "மதராஸ் வேண்டும்" என்று கடிதம் எழுதிப் போடுங்கள்!

"பட்டணம் பார்! சென்னைப் பட்டணம் பார்!" என்று நாம் சிறு பிள்ளைகளாயிருந்தபோது, ஒரு சிறு படத்தின் மீது பூதக் கண்ணாடியை வைத்துக் காட்டி நம்மை ஏமாற்றினார்கள். அது ஏமாற்றமென்று தெரிந்திருந்தும் காசு கொடுத்து அந்தக் காட்சியைப் பார்த்தோம்.

அந்தச் சென்னைப் பட்டணம் யாருக்கு உரியது என்பது பற்றி இப்போது வெகு காரமான விவாதங்கள் நடைபெறுகின்றன. எல்லைக் கமிஷன் கோர்ட்டுக்குப் போய்த் தீர்த்துக் கொள்ளச் சிலர் தயாராயிருக்கிறார்கள். வேறு சிலர் கோர்ட்டுக்குப் போகாமல் தடியடி அடித்துத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். இன்னும் சிலர் சென்னைப் பட்டணத்துக்காக இரத்தம் சிந்தத் தயாராயிருக்கிறார்கள்!

இப்படிப்பட்ட நிலைமையில், நம் நேயர்களில் பலர், இவ்வளவு போட்டியையும்

பொறுமையையும் சண்டை சச்சரவையும் கிளப்பி விட்டிருக்கும் சென்னைப் பட்டணத்தைப் பற்றிச் சில விவரங்கள் தெரிந்து கொள்ள விரும்பக்கூடுமல்லவா? தெரிந்துகொண்டு, சென்னைப் பட்டணத்தில் பார்க்க வேண்டிய இடங்கள், காண வேண்டிய காட்சிகள் எல்லாவற்றையும் பார்த்துவிட விரும்புவோமல்லவா? அதற்கு அநுகூலமாகச் சென்னைக் கார்ப்பரேஷன் கமிஷனர் ராவ்சாஹிப் சி. நரசிம்மம் எம். ஏ. பி. எல்., அவர்கள் ஒரு அருமையான அழகிய புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.

மேல் அட்டையிலுள்ள சித்திரத்தைப் பார்க்கும்போதே, "இந்த அழகிய பட்டணத்துக்காக எத்தனை சொட்டு இரத்தம் வேணுமானாலும் சிந்தலாம்! எத்தனை புட்டி மசி வேணுமானாலும் செலவழிக்கலாம்!" என்று தோன்றி விடுகிறது. புத்தகத்தை உள்ளே திருப்பிப் பார்த்தால் சென்னைப் பட்டணத்தில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றி எல்லா விவரங்களும் காண்கிறோம்.

சென்னைப் பட்டணத்தின் சரித்திரம், சென்னை நகர சபையின் பூர்வ வரலாறு, சென்னை நகர சபையானது நகரவாசிகளின் நன்மைக்காகச் செய்துவரும் காரியங்கள், வசூலித்து வரும் வரிகள்—ஆகிய சகல விவரங்களும் காணப்படுகின்றன. சென்னை நகரவாசிகளின் சௌகரியத்துக்காக என்று ஏற்பட்டிருக்கும் மயானங்களைப் பற்றிக் கூடக் கடைசியில் குறிப்பிட்டிருக்கிறது என்றால், விட்டிருக்கும் விவரம் ஏதாவது உண்டா என்று பார்த்துக் கொள்ளுங்கள்!

கையிலும் பையிலும் அடங்கும் அளவில் 296 பக்கத்துடன் வெளியாகியிருக்கும் இந்தக் கச்சிதமான புத்தகத்தின் விலை என்னவென்று குறிப்பிடவில்லை. விலை ஏதுவாயிருந்தால் என்ன? நகரசபைக் கமிஷனர் அவர்களுக்கு ஒரு "மதராஸ்" புத்தகம் வேண்டும் என்று உடனே கடிதம் எழுதிப் போடுங்கள்.

பாவம் போக்குங்க!

எட்டவுன்சு அரிசிக்கிப்போ இழுத்துப்பறிக்குது
இதுக்குமொரு பஞ்சமின்னு நடுக்கந்தோணுது
பட்டுவேட்டி சட்டைபோட்ட பண்ணையார்ஐயா! — நீங்க
பதுக்கிவைத்த தானியத்தை எடுத்துத்தாருங்க!

களஞ்சியத்தில் நெல்லைவைத்து காவலாய்நிற்க
கரையான்வந்து கோட்டைகட்டும் காலமா இது?
குளந்தைகுட்டி ஏழைஜனங்க குமைந்துவாடுறோம் — நீங்க
கொஞ்சம்மனம் வைத்தாலிந்த பஞ்சம்ஏதய்யா?

இருட்டடியில் தானியத்தை இரட்டிப்பாய்விற்று
இரகசியமாய்ச் சேர்த்தபணம் நெருப்பென்றெண்ணுங்க!
முரட்டடியாய்க் கொள்ளையாடும் புரட்டுக்காரனும் — ஏழை
முகத்தில்பசி கண்டுவிட்டால் இரங்குவானய்யா!

நம்மநாட்டை நாமேயாளும் நாளுபாருங்க
நலமிழந்து நாமிருந்தா உலகஞ்சிரிக்குமே!
சும்மாயிதைக் கேட்டுவிட்டுச் சோம்பியிருந்தால் — பெரும்
சோதனைக்கா ளாகவேண்டும் எண்ணிப்பாருங்க!

வைக்கப்போருக் குள்ளேவைத்த நெல்லைஎடுங்க!
வரட்டிக்குள்ளே மறைத்துவைத்த நெல்லைஎடுங்க
பக்கவீட்டுப் பரணியிலே ஒளித்தநெல்லையும் — தந்து
பஞ்சம்வரும் முன்னேயுங்கள் பாவம்போக்குங்க!

காட்டூர் கண்ணன்



தனராஜின் சங்கடம்

சாமுவேல் ஆசீர்வாத



"இந்த உலகத்திலே ஒரு முட்டாள் உண்டு என்றால், அது நான்தான் ஸார்!" என்றார் ஸ்ரீமான் தனராஜ், அப்போது தான் வீட்டுக்குள் நுழைந்த ஸ்ரீமான் வேத நாயகத்தைப் பார்த்து.

"ஏன் ஸார், அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார் வேத நாயகம்.

"ஏனா? கொஞ்சமாவது முன் யோசனையில்லாமல் அசல் முட்டாள்தனமான ஒரு வேலையை நான் செய்துவிட்டேன், ஸார்!"

"அப்படி என்ன முட்டாள்தனமான வேலையைச் செய்து விட்டீர்கள்? சொல்லுங்களேன்!"

"செய்தது ஒன்றுமில்லை; செய்யாதது தான் முட்டாள்தனம்! 1942 ஆகஸ்ட் கலவரத்திலே ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டியது. போகாததினாலேதானே இப்போது சட்டசபைத் தேர்தலுக்கு நிற்க முடியாமல் போய்விட்டது! தேர்தலுக்கு நிற்காததினாலேதானே மந்திரி பதவிக்கு வழியில்லாமல் போய்விட்டது! நான்மட்டும் இப்போது மந்திரியாயிருந்தால், சட்ட சபையிலே சில அசடுகள் கேள்வி கேட்கிறதுகளே, அதற்கெல்லாம் மண்டையிலே அறைந்தாற் போல் பதில் கொடுத்திருக்க மாட்டேனா!" என்று சொல்லிக் கையிலிருந்த பத்திரிகையைத் துருப்புச் சீட்டை யடிப்பது போலத் தரையில் எறிந்து, அதை மறுபடியும் எடுத்துக் கொண்டார் ஸ்ரீமான் தனராஜ்.

வேதநாயகம் சிரித்துக் கொண்டே, டபாத்தியாயர் வேலையிலிருக்கிற நாமெல் ாம் இப்படி மனக் கோட்டை கட்டி ன்ன பிரயோஜனம் ஸார்? விட்டுத் ள்ளுங்கள், பேச்சை!” என்றார்.

“மனக் கோட்டை கட்டினால்தான் மண் ாட்டையாவது எழும்பும்!”

“அல்னாஷர் மனக்கோட்டை கட்டின தை மாதிரிதான்!”

“அல்னாஷர் ஒரு மடையன் ஸார்! ண்ணாடிக் கூடையைப் பின்புறத்திலே வது தூரத்திலேயாவது வைத்துக் ாண்டு, ராஜகுமாரியை இப்படித்தான் தைப்பேன் என்று அவன் உதைத்திருந் ல், கண்ணாடிக் கூடை கவிழ்ந்திருக்குமா? ட்டாள் பயல், காலுக்குப் பக்கத்திலே வைத்துக் கொண்டான். அதுதான் அவன் ய்த தவறே தவிர, அவன் மனக் ாட்டை கட்டினதிலே என்ன தப்பு? ண்டிப்பாய் ராஜகுமாரியைக் கலியாணம் ய்துகொண் டிருப்பான்; அவளை தைத்தும் பார்த்திருப்பான்—கண்ணாடிக் டையைக் காலுக்கு எட்டாத தூரத்திலே வைத்திருந்தால்!” என்று சொல்லி, தன் கயிலிருந்த காப்பி டம்ளரை எடுத்துப் க்கத்தி லிருந்த மேஜைமீது வைத்தார் னராஜ்.

வேதநாயகம் மறுபடியும் சிரித்துக் ாண்டே “நேரமாய் விட்டது; புறப்பட ல்லையா, பள்ளிக்கூடத்துக்கு?” என்று சால்லவே, தனராஜுக்கு ஆவேசம் வந்து ட்டது. “பள்ளிக்கூடம் கிடக்குது ார், பள்ளிக்கூடம்! எவ்வளவோ பெரிய பரிய பிரச்னைகளெல்லாம் அரசியல் பிர கர்களுடைய மண்டைகளைக் குழப்பிக் ாண்டிருக்கிறபோது, நம்முடைய லோசனையையும் உதவியையும் வர்களுக்குத் தெரிவிக்காமல், இந்தப் பசங்களிடம் ‘நவுண்கிளாஸ், ட்வெர்பியல் கிளாஸ்’ என்று ளறிக் கொட்டி அவர்கள் மண் டையைக் குழப்பிக் கொண்டிருக் றோமே! பெரிய இடத்துக்குப் போக வேண்டிய மூளையைச் றிய இடத்திலேயே நாம் வியர்த் ம் பண்ணுகிறோமே, ஸார்! இங்கே பாருங்கள், சட்ட பையிலே கல்வி மந்திரியைப் பார்த்து......”

“ஸார், பத்து நிமிஷம்தான் இருக்கிறது! பிந்திப் போனால் ரிஜிஸ்டரிலே ஹெட்மாஸ்டர் நம் பேருக்கு நேரே ‘கொண்டி’ (கேள்விக் குறி) போட்டு விடுவார்!” என்று வேதநாயகம் துரிதப் படுத்தினார்.

“அந்தக் கொண்டிக்கெல்லாம் நான் பயந்த ஆசாமி யல்ல!” என்று சொல்லிக் கொண்டே தனராஜ் எழுந்துவிட்டார்.

“ஆபீஸிலே போய், பிந்தி வந்ததற்குக் காரணம் சொல்லியாகணும், அந்தத் தொல்லை எதற்கு? புறப்படுங்கோ, சீக்கிரம்!” என்றார் வேதநாயகம்.

“அப்படி விவரம் சொல்லுவதற்கு அவசியமில்லை, ஸார்! இந்த உபாத்தியாயர் வேலை போனால்......” என்று வாக்கியத்தை முடிக்காமலே, தனராஜ் கோட்டை மாட்டிக் கொண்டார்.

வேதநாயகமோ, “.........வேறே ஒரு வேலைக்கும் லாயக்கில்லை!” என்று அந்த வார்த்தையைத் தம் மனதிற்குள் முடித்துக் கொண்டார்!

“நேற்று உங்களுக்கு ஒரு ‘கொண்டி’ விழுந்திருக்குமே! ஹெட் மாஸ்டரிடம் போய்க் காரணம் சொன்னீர்களா?” என்று கேட்டுக் கொண்டே, வேதநாயகம் வெளியேற ஆரம்பித்தார்.

“அது ஒரு வேடிக்கை ஸார்!” என்று தனராஜ் புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு, வெளியேற, வேதநாயகம் “அதென்ன வேடிக்கை?” என்று கேட்க, தனராஜ் நடந்து கொண்டே விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தார்:

• • •

“நேற்று நான் பத்து நிமிஷம் பிந்திப் போய் விட்டேன். இதிலே என்ன ஸார் வந்து விட்டது? நான் பிந்தி விட்டதினாலே குடி முழுகிப் போகுமா? அல்லது குட்டிச் சுவராய்ப் போகிற இந்தப் பள்ளிக் கூடத்துக்கு, என்



பேருக்கு நேரே 'கொண்டி' இழுக்கிற தினாலே, ஹெட்மாஸ்டர் புனர்ஜன்மம் கொடுத்து விடுவாரா, என்ன! நான் பிந்தி வந்ததற்கும் காரணம் இல்லாமலா போய்விட்டது? நேற்று இதே நேரம் தான் இருக்கும். சைகிள் ஷாப் தேவராஜு, 'கள்ளுக்கடையை மூடுகிறது முட்டாள் தனமான வேலை!' என்று இரண்டு பேரிடம் சொல்லிக் கொண்டிருந்தான். 'மாகாணம் முழுதும் கள்ளுக் கடையை மூடியிருக்க வேண்டியது நியாயம்' என்று ஓதுவா மூர்த்தி ஓங்கிப் பேசினார். மனுஷன் கள்ளைக் குடித்துப் பார்த்திருந்தால் அப்படி ஓங்கிப் பேசியிருக்க மாட்டார். கூட்டம் கூடி விட்டது, சைகிள் ஷாப் முன்னாலே. வந்தவங்க ளெல்லாம் ஓதுவா மூர்த்தியை ஆதரித்துத்தான் பேசினாங்களே ஒழிய, தேவராஜுக்கு அனுசரணையாய் ஒருத்தனும் பேசவில்லை. இதைப் பார்த்து விட்டுப் போக முடியுமா ஸார்? 'கழுதை கிடக்குது, பள்ளிக்கூடம்!' என்று நான் கூட்டத்துள்ளே நுழைந்தேன்.

'ஸார்வாளுடைய அபிப்பிராயம் என்ன?' என்றார் ஓதுவாமூர்த்தி.

'என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லத்தான் வந்தேன். அரிசி, துணி இவற்றைப் போல் கள்ளையும் ரேஷன் பண்ண வேண்டும்!' என்றேன்.

'சபாஷ்!' என்றார்கள், ஓதுவா மூர்த்திக்கு ஒத்து ஊதினவங்க ளெல்லாம். ஓதுவாமூர்த்தி விழித்தார்.

'சிறுபான்மையோர் குடிக்கிறதினாலே தான் மது வுண்பது பாவமாக எண்ணப் படுகிறது. மட்டாக எல்லாரும் குடிக்க ஆரம்பித்தால் அது கேவலமாகக் கருதப் பட மாட்டாது. அதன் ஔஷதத் தன்மை எல்லாருக்கும் பயன்படும். மேலும் ஓலைக் குடிசைகளில் ஊருக்கு வெளியே வைத்துக் கள்ளை விற்பனை செய்யக் கூடாது. ஊருக் குள்ளே ரேஷன் கடைகள் மாதிரி கள்ளுக் கடைகளை ஏற்படுத்த வேண்டும். ரேஷன் கார்டுகளிலே, அரிசியிலே ஒரு பங்குக்குக் கள் என்று குறிப்பிடப்பட வேண்டும். கள் வேண்டாதவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு கோதுமை அல்லது சேனம் கொடுக்கப் பட வேண்டும்!' என்று அங்கே ஒரு பத்து நிமிஷம் பேசினேன்.

“எவனாவது எதிர்த்து ஒரு கேள்வி கேட்டிருப்பானா, ஸார்? என்னைப்
போன்றவர்களை யெல்லாம் சட்ட ச
யிலே பேசவிட்டால், இப்போது கே
கிறார்களே, அந்த அசட்டுக் கேள்
களுக் கெல்லாம் வழி வைப்பேனு
இல்லையோ? அதைச் சொல்லி இப்போ
என்ன பிரயோஜனம்? 1942 ஆகஸ்டி
ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டியது
நல்ல வேளை, அன்று இப்படியே எ
பிரசங்கம் நீண்டு கொண்டே போயிரு
கும். ஜவுளிக்கடை சங்கரம் பிள்ளை, 'ஸ
வாளுக்கு 'டயம்' ஆகலையா?' என்
கேட்டு விட்டார். மணியைப் பார்த்தே
9-45 ஆகிவிட்டது. 'இது ஸார்வா
தானா?' என்று ஓதுவாமூர்த்தி திகைத்
திற்கும்படியாக அத்துடன் பேச்சை
முடித்துக்கொண்டு ஓடினேன், ஸார்!

“ஓதுவா மூர்த்திக்கு நான் பேசின
பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கு
போன வாரம்தான் ஒரு கூட்டத்தில
மதுவிலக்கைப் பற்றி முக்கால் ம
நேரம் நான் பேசினபோது, அவர் மு
வரிசையிலே உட்கார்ந்து பலமாய்க்
தட்டிக் கொண்டிருந்தார்!

“என் வாழ்க்கையிலே நூறு கெஜ ஓட்
மென்று ஓடினது நேற்றுத்தான்! பள்ளி
கூடம் வந்து சேர்ந்தேன். மணி 10-2
ஆகிவிட்டது. மேஜை மேலே ரிஜிஸ்
ரைக் காணோம். ரிஜிஸ்டர், ஆபீசுக்கு
போய்விட்டது என்று மிஸ்டர் சுந்த
சொன்னார். அவர் மேலும், 'ஆபீசுக்
உங்களைக் கூட்டிக் கொண்டு போக இ
போது ஆள் வரும்' என்றும் சொன்னா

“எனக்குக் கோபம் வந்துவிட்ட
'ஆள் வந்து நான் போக வேண்டியதில்லை
நானே போய் இந்த ஹெட்மாஸ்டருக்
ஒரு நல்ல 'டோஸ்' கொடுக்கப் போ
றேன்' என்று புறப்பட்டேன்.

“மிஸ்டர் சுந்தரம் சிரித்தார். 'மிஸ்ட
சுந்தரம்! அப்படிச் சிரிக்காதேயுங்க
இன்றைக்கு இந்த ஹெட்மாஸ்டர் எ
னிடம் நன்றாய் வாங்கிக் கட்டிக் கொள்
போகிறார். கைகலப்பு ஏற்பட்டால் நீங்க
மட்டும் விலக்க வரக்கூடாது!' என்
எச்சரித்துவிட்டு ஆபீசுக்குப் போனேன்.

[இந்தச் சமயத்தில் அவர்கள் இருவரு
சங்கரம் பிள்ளை ஜவுளிக் கடையன்
வந்து விட்டார்கள். “ஸார், 'டயம்' ஆ
லையா?” என்று நேற்றைய தினம் கத்தி
சங்கரம் பிள்ளை, இன்று அவர்கள் இ

...ரையும் கண்டதும், "ஸார்வாள்களுக்கு ...யங்கள்' ஆகலேயா!" என்று கத்தினார்! ...ந்த மனுஷன் ஹானரரி ஹெட்மாஸ் ... ஸார்!" என்று தனராஜ் முகத்தைச் ...த்தார். "கிடக்கிறான், மனுஷன்! ...பீஸிலே நடந்ததைச் சொல்லுங்கள், ...ர்!" என்று வேதநாயகம் தூண்டவும், ...ராஜ் கதையைத் தொடர்ந்து ...ன்னார்.]

"......ஆபீசுக்குள் நுழைந்தேன். ஹெட் ...ஸ்டர் அங்கே யில்லை. பியூன் தங்கராஜ் ...டம் இருந்தான், 'ஸார்! 'கொண்டி' ...ந்துவிட்டது!' என்றான் அனுதாபத் ...ோடு.

'ஆசாமி எங்கே?' என்றேன்.

'வகுப்புக்குப் போயிருக்கிறார், ஸார்! ... அரை மணி நேரமாகும்!' என்றான்.

'கையெழுத்தைப் போட்டுமா?' என்று ...ட்டேன்.

'உங்கள் இஷ்டம் ஸார்' என்றான்.

'மேஜையண்டை போய் ரிஜிஸ்டரைப் ...ட்டினேன். 'எதற்கப்பா இந்த அவதி? 12 ஆகஸ்டிலே ஜெயிலுக்குப் போயிருக் ...ல......?' என்று என்னைக் கேட்பது ...லிருந்தது, என்னுடைய பெயருக்கு ...னால் போட்டிருந்த அந்தக் ...ள்விக் குறி!

' மனது பகீரென்றது. என்னை யறியா ... என் கை சட்டைப் பைக்குள் சென்று ...பனாத் துனாவி எடுத்தது. மறுகணம் ...ட்மாஸ்டருடைய, பென்சிலால் இட்டப் ... கேள்வி யடையாளம், இருந்த இடம் ...ியாமல் மறைந்து அதன் ஸ்தானத்தில் ... கையெழுத்து பதிந்துவிட்டது.



தங்கராஜை எட்டிப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டே, 'ஒரு சங்கடம் இருக்கிறது, ஸார்!' என்றான்.

'என்னப்பா சங்கடம்?' என்றேன்.

'ஹெட்மாஸ்டர் இத்தனை கேள்வி யடையாளம் என்று கணக்கு வைத்திருப்பார், ஸார்!' என்றான்.

"இந்த ஆபத்தை நான் எதிர் பார்க்கவில்லை. 'என்னப்பா செய்கிறது, கையெழுத்தைத் துடைக்க முடியாது; மையெழுத்தல்லவா?' என்றேன்.


'அழித்த 'கொண்டி'க்குப் பதில் 'கொண்டி' போட்டுவிட வேண்டும்!' என்றான்.

"ரிஜிஸ்டரைப் பார்த்தேன். கையெழுத்துப் போடாத நபரே யில்லை. ஓர் ஆசாமி தான் கையெழுத்துப் போட மறந்திருக்கிறார். அவர் ஹெட்மாஸ்டர்தான்! அவருடைய பெயருக்கு நேரே ஒரு கேள்வி அடையாளத்தைத் தீட்டிவிட்டு, ரிஜிஸ்டரை மூடினேன். தங்கராஜ் சிரித்தான். 'கதையின் முடிவு எப்படியிருக்குமோ!' என்றான்.

'என்னப்பா முடிவு? தலையா போய் விடும்!' என்று சொல்லிவிட்டு, வகுப்புக்குப் போய் விட்டேன்......

[விஷயம் இவ்வளவு சுவாரஸ்யமாயிருக்குமென்று வேதநாயகம் எதிர்பார்க்கவில்லை. முடிவு என்னவென்பதை அறிய அவருக்கு உண்டான ஆவலிலே, அவர் பள்ளிக்கூடத்தையே மறந்து விட்டார். தனராஜை மூச்சு வாங்கக்கூட அவர் விடாமல் கதையை முடிக்கும்படி துரிதப்படுத்தினார். 'ஸார், ஸார்!' என்று ஓதுவார் மூர்த்தி, தூரத்திலுள்ள ஒரு கடையிலிருந்து கூப்பிட்டதைக் கூடக் கவனியாமல் தனராஜ் கதையைத் தொடர்ந்தார்.]

"...பாடத்திலே அன்று மனம் ஓட வில்லை. ஹெட்மாஸ்டர் தன் பேருக்கு நேரே இருக்கிற கொண்டியைப் பார்த்ததும் அவர் முகம் எப்படிச் சுளிக்கு மென்பதைப் பார்க்க என் மனம் துடித்துக் கொண்டிருந்தது. பயல்களுக்கு யோகம்தான்! போஸ்ட் மாஸ்டர் மகன் துரைசாமி, ஆசை



"வாங்க, வாங்க! கொஞ்சம் இப்படி உட்காருங்க! இதை முடித்து விட்டு வந்து விடுகிறேன்."

"என்றால் இப்போ உட்கார முடியாது தப்பா!"

"அப்படின்னு பரவாயில்லே; நின்னு கிட்டே இருங்க!"

நீர'சவுன் ஸிஸா'வை 'அட்வெர்பியல்கிளாஸ்' என்று விளாசியிருப்பான். இன்றைக்கு அப்படிச் சொன்னானோ, பிழைத்தானோ? முதல் பீரியட் முடிந்தது. நேரே ஆபீசுக்குப் போனேன். அப்போதுதான் ஹெட்மாஸ்டரும் மேஜை முன்னாலே உட்கார்ந்து ரிஜிஸ்டரைப் புரட்ட ஆரம்பித்தார். என் மனம் எப்படித் துடித்திருக்குமென்று நினைக்கிறீர்கள்? 'புளூமவுண்டன் எக்ஸ்பிரஸ்' ஸ்டேஷன் பிளாட்பாரத்தைக் கண்டதும் என்ன வேகத்தில் போகுமோ, அதே வேகத்தில் என் மார்பு அடித்துக் கொண்டது. மனுஷன் ரிஜிஸ்டரைப் பார்த்தார். இதுதானா பூலோகம் என்றாற் போலக் கண்ணைத் திறந்து மறுபடியும் ரிஜிஸ்டரை முறைத்துப் பார்த்தார். அவர் முகமே 'கொண்டி' இழுத்தாற் போலக் கோணிவிட்டது. கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடியும் பார்த்தார். முகம் களித்துக் கொண்டது. கண்கள் பிதுக்குவதுபோல் உருண்டன. ரிஜிஸ்டரை மூடினார். நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிவிட்டார். மனுஷனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது, ஸார்! விஷயத்தைச் சொல்லி அவரைச் சரிப்படுத்தலாமென்று கூட எனக்கு யோசனை வந்து விட்டது. அதற்குள் அவர் தம் கண்களைத் திறந்து என்னைப் பார்த்தார்.

'மிஸ்டர் தனராஜ்!'

'ஸார்!'

'மற்றவர்களுடைய குற்றத்தைக் கவனிக்கிறதுபோல் தன்னுடைய குற்றத்தையும் கவனிக்கவேண்டும் என்று ஒரு கு
உண்டே, அது தெரியுமா உங்களுக்கு?'

'தெரியும் ஸார்! ஏதிலார் குற்
போல் தன் குற்றம் காண்கிற்பி
தீதுண்டோ மன்னுமுயிர்க்கு?'

'அதுதான்; அந்தக் குறளின்படி இ
உலகத்திலே ஒரு மனுஷன் நடக்கி
றான் என்றால், அது நான்தான்!'

'எப்படி ஸார்?'

"எப்படியா? பிந்தி வருகிற உபாத்
மார் பேருக்கு எதிரே ஒரு கேள்வி அ
யாளம் போட்டு நான் காரணம் சொல்
சொல்வே னல்லவா? நீங்கள் கூட போ
வாரம்...'

'ஆமாம் ஸார்! ஆமாம்!'

'இன்றைக்கு உபாத்திமார் எல்லாரு
சரியான நேரத்தில் வந்து விட்டார்க
நான் மட்டும்தான் பிந்தி வந்திருக்கிறே
எனவே, சுவு இரக்கமில்லாமல் எ
பேருக்கு முன்னாலும் கேள்விக் கு
போட்டு விட்டேன்! இதோ பாருங்க
ரிஜிஸ்டரை!' என்று சொல்லி, அதை
திறந்து என்னிடம் கொடுத்தார்.

"என் மனம் படக் படக் கென்று அடி
துக் கொண்டாலும் முகத்தில் வியப்ப
குறியை வரவழைத்துக் கொண்டு ரிஜி
டரைப் பார்த்துக் கொண்டே, 'என்
ஆச்சரியம், ஸார்! இப்படி உலகத்தி
ஒரு ஹெட்மாஸ்டரும் இருக்க மா
டார்கள்!' என்றேன்.

"அந்தச் சமயம் பியூன் தங்கராஜு
வந்து சேர்ந்தான். 'தங்கராஜ், ந
இன்றைக்கு எத்தனை மணிக்கு வந்தேன்
என்று அவனிடம் ஹெட்மாஸ்டர் கேட்ட

'எட்டு நாற்பதுக்கு ஸார்!' என்று
அந்த மடையன்!

எனக்குப் பகீரென்றது. 'பிந்தி
வாவில்லையே, பிறகு ஏன் இப்படி மா
பண்ணினேன்?' என்று ஹெட்மாஸ்
தலையைச் சொறியத் தொடங்கினார்.

"அடுத்த எட்டு எங்கே கொ
போகுமோ, யார் கண்டது? மூக்கு வந்த
கை யெழுத்துப் போடாத குற்றத்திற்க
இப்படி இழுத்திருப்பீர்கள்!' என்று
யோசிதமாக விளக்கினேன்.

'அப்படித்தான் இருக்கும், மிஸ்
தனராஜ்! அப்படி யென்றால் அது இ
னும் ஒரு படி மேல் என்று சொல்லுங்க
என்று சொல்லும்போது அவருடை
முன் வரிசைப் பற்கள் எல்லாம் தெரிந்த

‘ஒரு படியா! எத்தனையோ படிமேல்!’ என்று ஒரே தூக்காய்த் தூக்கி வைத்துப் பேசினேன்.

“மனுஷன் உள்ளம் பூரித்துப் போனார், ஸார்! இந்த முகஸ்துதி என்ற ‘டானிக்’குக்கு ‘டோஸ்’ கிடையாது; அதிலே மனுஷனை முழுக்கி எடுத்து மூச்சுத் திணற வையுங்களேன், ‘போதும்’ என்று அவன் மனம் சொல்லாது. பழைய காலத்திலே தமிழ்ப் புலவர்கள் எல்லாம்......ஸார்!!!”

ஸ்ரீமான் வேதநாயகம் திடுக்கிட்டு, நாலு அடி உயரம் ஆகாசத்திலே துள்ளிக் குதித்தார். ஸ்ரீமான் தனராஜ் போட்ட ‘ஸார்’ என்ற கூச்சல் வேதநாயகத்தின் உடலை ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது. இப்படி கதை சொன்னவர் கத்தினதற்கும், அடுத்தவர் குதித்ததற்கும் தகுந்த காரணம் இருந்தது. கதையின் போக்கில் இருவரும் ஈடுபட்டு, பள்ளிக்கூடத்திற்குப் பிரியும் பாதையில் திரும்பாமல் இரண்டு பர்லாங் தூரம் வேறு பாதையில் நடந்து வந்து விட்டார்கள். இப்போது அவர்கள் நின்ற இடம் பஸ் ஸ்டாண்டு. சுற்றுமுற்றும் பார்த்தார்கள். ஒருவரை யொருவர் பார்த்து விழித்தார்கள். அடுத்த விநாடி இரண்டு பேரும் துள்ளிக் குதித்தார்கள். குதித்திராவிட்டால் பஸ் ஒன்று அவர்களைப் பிடித்துத் தள்ளியிருக்கும்.

“காரியம் கெட்டுப் போச்சதே, ஸார்! மனுஷன் எரிந்து விழுவானே!” என்று வேதநாயகம் அடித்துக் கொண்டார்.

“உங்கள் விஷயமாவது பரவாயில்லை. நான் போன வாரமும் ஒரு நாள் மாட்டிக் கொண்டேன். இன்றைக்கும் அகப்பட்டுக் கொண்டால் என்ன பண்ணுவாரோ தெரிய வில்லையே! இப்படி ஒரு மனுஷனுக்குப் பயப்படும்படியான நிலைமை வந்துவிட்டதே! 1942 ஆகஸ்டிலே ஜெயிலுக்குப் போயிருந்தால் இந்த கதி வந்திருக்குமா?” என்று பிரலாபித்தார் தனராஜ்.

மறு விநாடி, “மிஸ்டர் தனராஜ்!” என்ற சத்தம். இருவரும் திரும்பினார்கள். சாட்சாத் ஹெட்மாஸ்டரே கையில் ஒரு சூட் கேசுடன் அங்கே காட்சியளித்தார்!

“என்ன, இரண்டு பேரும் இங்கே நிற்கிறீர்கள்? நான் இல்லை யென்றால் இப்படி ‘சென்ஸ் ஆப் ட்யூட்டி’ இல்லாமல் சுற்ற ஆரம்பிக்கிறதா, அழகு?” என்று அவர் ஒரு அதட்டல் போட்டார்.

தனராஜின் கால்கள் வெலவெலத்து விட்டன. வேதநாயகம் ஸ்தம்பித்து விட்டார்.

தனராஜ் சமாளித்துக் கொண்டு, “இல்லை ஸார், இரண்டு நிமிஷம் பிந்தி வந்தோம். ‘எக்ஸ்பிளனேஷன்’ கொடுக்கிறதற்காக நீங்கள் வரச் சொன்னீர்களாம். அதுதான்......” என்று ஆரம்பித்தார்.

“நான் வரச் சொன்னேனா? யார் சொன்னது? நான்தான் இன்றைக்குப் பள்ளிக்கூடத்துப் பக்கமே போக வில்லையே!” என்றார் ஹெட்மாஸ்டர்.

ஹெட்மாஸ்டர் தம் வீட்டிலிருந்து நேரே பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருப்பது தனராஜுக்கு எப்படித் தெரியும்? ஆனாலும் மந்திரியா யிருந்து சட்டசபையிலே சமாளிக்கக் கூடியவருக்கு இதற்குப் பதில் சொல்லத் தெரியாமலா போய்விடும்? “பிறகு, நீங்கள் வரச் சொன்னதாகத் தங்கராஜ் சொன்னானே, விளையாட்டுக்குச் சொல்லியிருப்பானோ!” என்றார்.

“தங்கராஜ் சொன்னானா? என்ன மிஸ்டர், உளறுகிறீர்கள்! அவன்தான் தன் அண்ணனுக்குக் கலியாணமென்று இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு நேற்றே நாங்குனேரிக்குப் போய்விட்டானே!” என்றார் ஹெட்மாஸ்டர்.

என்ன பண்ணுவார் ஸ்ரீமான் தனராஜ்! தங்கராஜையும் நாங்குனேரியையும் பொது



பாகவதர் :— இன்னிக்கு உங்கள் வாசிப்பு ரொம்பப் பிரமாதம்! நல்ல விறுவிறுப்பு இருந்தது!

மிருதங்க வித்வான் :—அதை ஏன் கேட்கிறீர்கள்! இன்னும்கூட நல்லா வாசிச்சிருப்பேன்; கச்சேரி நடுவில் என்னை ஒரு தேள் கொட்டிடுத்து; அதை வெளிக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டு வாசித்தேன்!

பாகவதர் :— அப்படிச் சொல்லுங்கோ! என்னடாப்பா பிரமாதமான விறுவிறுப்பு இருந்ததேன்னு பார்த்தேன்!

வாகக் கல்யாணங்களையும் மனதிலே சபிக்கத் தொடங்கினார். ஒத்தாசைக்கு வேதநாயகம் சட்டென்று வராவிட்டால் அவர் பாடு ஆபத்தாய் முடிந்திருக்கும்.

“அவாள் தெரியாமல் சொல்கிறார்கள். பியூன் தங்கராஜ் சொல்லவில்லை, ஸார்! மிஸ்டர் தங்கத்துரை சொன்னதாக மிஸ்டர் பாண்டியன் சொன்னார்கள்!” என்று ஸ்ரீமான் வேதநாயகம் வெளுத்து வாங்கினார்!

“மிஸ்டர் பாண்டியன் ஸ்கூலிலேயா இருக்கிறார்? ஒரு அவசர ஜோலியாகப் பாளையங்கோட்டைக்குப் போகணுமென்று நேற்றே லீவு கேட்டாரே!” என்றார் ஹெட்மாஸ்டர்.

வேதநாயகம் அசந்து போனார். வாய்க்கு வருகிற பேரை யுடையவர்களெல்லாம் லீவு எடுக்க ஆரம்பித்தால் நியாயமாகுமா? இந்தச் சமயத்தில், முதல் அதிர்ச்சியினின்றும் தெளிவடைந்த தனராஜ், “மிஸ்டர் பாண்டியன் ஸ்கூலிலேதான் ஸார் இருக்கிறார். மத்தியானம்தான் போகப் போகிறார்களாம்!” என்று ஒரு போடு போட்டார்.

“சரி, ‘எக்ஸ்பிளநேஷன்’ எல்லாம் காலைக்குப் பார்த்துக் கொள்ளலாம். இப்போது ஸ்கூலுக்குப் போங்கள்!” என்று ஹெட்மாஸ்டர் விரட்டவும், ‘தப்பினோம் பிழைத்தோம்’ என்று இருவரும் பாய்ந்து சென்றார்கள்.

“ஸார், மிஸ்டர் பாண்டியன் நேற்றே புறப்பட்டிருப்பார். காலைக்கு ஹெட்மாஸ்டர் அவரிடம் விசாரித்து விட்டால் ரொம்பக் கேவலமாய்ப் போய்விடுமே!” என்று வேதநாயகம் சங்கடத்துடன் சொல்லவும், “அதைப் பற்றிப் பயப்படாதேயுங்கள்! மிஸ்டர் பாண்டியன் போயிருந்தால் இன்று காலை ஆறு மணிக்குப் பிறகுதான் போயிருக்க வேண்டும். நான் அதிகாலையில் அவரைப் பார்த்தேன். கோவில்பட்டியிலிருந்து திரும்பியதும் அவரிடம் விஷயத்தைச் சொல்லி ஆளைச் சரிப்படுத்தி விடலாம். அதற்கு நானாச்சு!” என்று நம் நண்பரைத் தைரியப்படுத்தினார் தனராஜ்.

ஸ்ரீமான்கள் இருவரும் பள்ளிக்கூடம் வந்து சேரும்போது முதல் பாடம் முடிகிற நேரமாகி விட்டது. நேரே வகுப்புக்குள் நுழைந்தனர். மறு நிமிஷம் மூன்றாம் பாரம், ஏ. செக்ஷனில் ஸ்ரீமான் தனராஜின் ‘அனலிஸிஸ்’ தர்பார் ஆரம்பித்து விட்டது.

“என்ன கிளாஸ் சொல்லுடா!...... அடா, மண்டு! அட்வெர்பியல் கிளாஸை நவுன் கிளாசென்று வாய் கூசாமல் சொல்கிறாயே! என்டா துரைசாமி, இந்த இரண்டு கிளாஸ்களையும் இப்படிக் குழப்புகிறாயே, உனக்கு என்ன பண்ணுகிறது? அடே! நான் மட்டும் கல்வி மந்திரியாயிருந்தால் உன்னை ஒரு வேலை செய்திருப்பேன். எல்லா இங்கிலீஷ் கிராமர் புத்தகங்களையும் திருத்தி எழுத வைத்து, நவுன் கிளாசுக்கு அட்வெர்பியல் கிளாசென்றும், அட்வெர்பியல் கிளாசுக்கு நவுன் கிளாசென்றும் பேரை மாற்றிப் போடச் சொல்லியிருப்பேன். இப்போது அதை நினைத்து என்ன புண்ணியம்! 1942 ஆகஸ்டிலே ஜெயிலுக்குப் போகத் தவறி விட்டேன்டா துரைசாமி, தவறி விட்டேன்!” என்று முடித்தார் ஸ்ரீமான் தனராஜ்.

அதற்குள் மணியும் அடித்தது. மூன்றாம் பாரம் ஏ. செக்ஷன் செல்லத்துரை, அப்போதுதான் வகுப்புக்குள்ளே புஸ்தகக் கட்டோடு நுழைந்தான். “என்டா லேட்?” என்று ஒரு போடு போட்ட தனராஜ், வந்த பயல் மிஸ்டர் பாண்டியனுடைய மகன் என்று கண்டதும், “அப்பா, எப்போது திரும்புவார்கள்?” என்று கேட்டார்.

“எப்போது வருவார்களோ, தெரியாது ஸார். இப்போதுதான் போகிறார்கள்!” என்றான் செல்லத்துரை.


“இப்போதுதான் போகிறார்களா?” என்று ஸ்ரீமான் தனராஜ் பரபரப்புடன் கேட்டார்.

“ஆமாம் ஸார், பத்து மணி பஸ்ஸிலேதான் போகிறார்கள். பஸ் ஸ்டாண்டு வரைக்கும் என்னை வரச் சொன்னார்கள். அதனால்தான் ‘லேட்’டாயிற்று, ஸார்!” என்றான் செல்லத்துரை.

“பஸ் ஸ்டாண்டிலே ஹெட்மாஸ்டரைப் பார்த்தாயடா?”

“பார்த்தேன், ஸார்! ஹெட்மாஸ்டரும் அப்பாவும் ஒரே பஸ்ஸிலேதான் ஏறினார்கள், ஸார்!” என்றான் செல்லத்துரை.

அவ்வளவுதான்; ஸ்ரீமான் தனராஜ் நாற்காலியில் சாய்ந்துவிட்டார்!



பதினோராம் அத்தியாயம்

உபதேசம்

சாரங்கனும் கிருஷ்ணகுமாரியும் சிறையிலிருந்து தப்பி வந்த தலைவரைச் சிரமப்பட்டுத்தான் கண்டுபிடித்தார்கள். அடேயப்பா, அவரைப் பார்ப்பதற்கு முன் எவ்வளவு பரீக்ஷைகள்! சாரங்கனுக்கு அலுப்பாகத்தான் இருந்தது, அதுவும் அத் தலைவருக்கு அருகிலிருந்த குட்டித் தலைவர்கள் செய்த ஆர்ப்பாட்டங்களைக் கண்டு. அதில் ஒருவர், "ஸார், உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று கவலையுடன் கேட்டார், குறிப்பாக கிருஷ்ணகுமாரியைப் பார்த்துக்கொண்டே. "ஆமாம் ஸார், ஆகிவிட்டது! மூன்று குழந்தைகள் கூட இருக்கின்றன......என், ஒரு பேரன் கூடப் பிறக்கப் போகிறான்! எங்கப்பாவுக்கு வயது 56; அம்மாவுக்கு வயது 49...... இன்னும் என்ன ஸார் தெரிய வேண்டும், உங்களுக்கு?" என்று சாரங்கன் அவர்மேல் எரிந்து விழுந்தான். மேற்படி தலைவர் வாயைத் திறக்கவில்லை.

ஆனால் ஜயப்பிரகாஷ் பேச்சிலும். அவர் மேதா விலாசத்திலும் சாரங்கன் மனதைப் பறி கொடுத்து விட்டான். அவரும் முதலில் கிருஷ்ணகுமாரி சொன்னபடியே தான் ஆரம்பித்தார். "நமக்கு வாய்த்த ஒரு சமயத்தை நழுவ விட்டுவிட்டோம். ஆகஸ்ட் மாதத்தில் ஜனங்கள் தயாராயிருந்தார்கள். அவர்கள் பிரிட்டிஷ்காரர்கள்மீது பாயவும் பாய்ந்தார்கள். 'பலே, சபாஷ்!' என்று சொல்லிவிட்டு நாம் சும்மா இருந்து விட்டோம். பிரிட்டிஷ் சிங்கம் படுத்தாலும் சாகவில்லை. வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடினவர்கள் இன்று அமெரிக்கர்கள்—என் நம்மவர்கள் — உதவியால் நம்மைத் திருப்பி அடிக்கிறார்கள். நாம் கையாலாகாதவர்கள். 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்று மந்திரம் ஓதுகிறோம். காந்தி என்ன சொல்வார் என்பதைப் பற்றி விவாதிக்கிறோம்."

சாரங்கன் அவர் சலிப்புடன் பேசுகிறார் என்று எண்ணி, "ஆனால் நமது ஜனங்கள் என்றைக்கும் ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்று இருந்து விடுவார்களா?" என்று குறுக்கே ஒரு கேள்வி போட்டான்.

"ஜனங்களைச் சொல்லி என்ன பிரயோசனம்? நான் என் கண்ணால் பார்த்தேன். இன்றைக்குக்கூட எங்கெல்லாம் பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் மிருக பலத்தைக்

கொண்டு ஜனங்களை ஒரேயடியாக அமுக்கப் பார்த்தார்களோ, அங்கெல்லாம்தான் ஜனங்கள் அவர்களை அப்படியே தீர்த்து விட வேண்டுமென்று துடியாய் நிற்கிறார்கள். பெண்கள் மானமிழந்ததையும், பிள்ளை குட்டிகள் வதம் செய்யப்பட்டதையும் நேரில் கண்டவர்களா எதிரிக்குப் பணிந்து விடுவார்கள்? இந்தப் பலாத்காரத்திற்கு அஞ்சி நடுங்கிக் கிடப்பவர்கள் நகரத்திலிருந்துகொண்டு நாலு காசையே பிரதானமாக மதிக்கும் குமாஸ்தாக்களும் குட்டி முதலாளிகளும்தான். அவர்களைக் கொண்டு காரியம் ஒன்றும் நடக்காது.''

"ஆனால் கிராமத்திலிருக்கும் பாமர ஜனங்களால் முடியுமா, இந்த மாபெரும் ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க?''

"அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். உன்னையும் என்னையும் போன்றவர்களால் செய்யக்கூடிய காரியம் ஒன்று உண்டு. நம் நாட்டு ஜனங்கள் இன்று ஒரே மனதாக ஆங்கிலேயர்களை வெறுக்கிறார்கள். நாட்டில் இதுவரையில் இம்மாதிரி துவேஷம் நெடுளிலும் பரவியிருந்தது கிடையாது. சிப்பாய் கலகத்தின் போதுகூட இப்படி இருந்ததில்லை. ஆனால் இந்த நெருப்பு தானாக எரிந்து சாம்பலாகப் போய் விடுமோ என்று பயமாயிருக்கிறது. அதை ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு போய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பங்களாக்களில் வைப்பது நமது வேலை. அதற்குத் தீரம் வேண்டும்; ஸாகஸம் வேண்டும்; அறிவு வேண்டும்; உண்மை வேண்டும்......''



ஜயப்பிரகாஷ் பேசிய போது அவருடைய கண்கள் ரத்தமாகச் சிவந்து விட்டன. அவர் பேச்சில் மயங்கின சாரங்கன் அப்போதே அவர் சொன்ன காரியத்தில் ஈடுபடத் துடித்தான்.

அதை ஒருவாறு அறிந்து கொண்ட ஜயப்பிரகாஷ், "போது தம்பி! போது! உன்னைப்போல் ஆயிரம் பேர் இருந்தால் போதும், நம் நாட்டை உத்தாரணம் செய்ய. ஆனால் காலம் சரியாக இல்லை. ஆகஸ்ட் மாதத்தில் ஜப்பான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலை முறித்து விட்டது. அப்பொழுது நாம் கொஞ்சம் பலமாகச் சத்தம் போட்டிருந்தால்கூடப் பறந்து போயிருக்கும் அரசாங்கம்......என், அவர்களே ஒப்புக்கொள்ள வில்லையா, நாம் வெற்றியை அனேகமாகக் கைப்பற்றி விட்டோமென்று? இன்று அமெரிக்காவின் பக்கபலம் அவர்களுக்கு இருக்கிறது; சீனாவால் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. ருஷ்யா தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே முனைந்திருக்கிறது. ஆனால் நமக்குக் காலம் வராமல் போகாது. பிரிட்டிஷ்காரர் கை கொஞ்சம் ஓய்ந்தால் போதும், நாம் ஜெயித்து விடலாம். ஆனால் அது என்னவோ இப்பொழுது சேரும் என்று தோன்றவில்லை......''

சாரங்கனுக்கு அலுப்புத் தட்டியது. கோபம் கூட வந்தது. 'இப்போது ஒன்றும் முடியாது' என்று சொல்லி விட்டுப் போவது தானே? வீணாக அமெரிக்காவையும், சீனாவையும், ருஷ்யாவையும் எதற்காக இழுக்க வேண்டும்? என்று நினைத்த அவன், "அப்படியென்றால் நாம் பேசாமல் கையைக் கட்டிக்கொண்டு வாயில் எப்போது வாழைப் பழத்தை உரித்துப் போடப் போகிறான் என்று காத்துக்கொண்டு இருக்க வேண்டியதுதானா?'' என்றான். அவன் குரலில் தொனித்த பரிகாசம் கிருஷ்ணகுமாரிக்குப் பயத்தைத் தந்தது.

ஜயப்பிரகாஷ் முகத்தில் புன்னகை அரும்பிற்று. "தம்பி, நீ பேசுவதைப் பார்த்தால் உன் வாயில் வாழைப் பழத்தை உரித்துப் போட்டால் கூடப் போதாது போலிருக்கிறதே? அதைத் தின்னக் கூட ஆள் வைக்க வேண்டும்! நான் முதலிலேயே

சொல்லவில்லையா, நாம் என்ன செய்ய வேண்டுமென்று? பம்பாயிலிருந்து காங்கிரஸ் ரேடியோ பேசுகிறதே, அதை நீ கேட்பதில்லையா? இப்பொழுதே ஒரு சங்கற்பம் செய்து கொள். 'நான் இன்றைய தினம் ஒரு கிராமவாசிக்காவது நம் போரின் தத்துவத்தை விளக்கிச் சொல்லுவேன். அவன் அனுதாபத்தைப் பெறுவேன்' — இதை நீ விடாமல் செய்தால் கூடப் போதும்."



"நீங்கள் சொல்லும்போது ரொம்ப சுலபமாய்த்தானிருக்கிறது. பசியும் பட்டினியும்தான் இன்று நம் கிராமவாசிகளின் கண்கண்ட தெய்வம். அவர்களிடம் நம் உபதேசம் எவ்வளவு தூரம் செல்லும்?"

"இதோ பார், நீயே எனக்கு ஒரு முக்கியமான திட்டத்தை நினைவு மூட்டினாய்...... அந்தப் பசியையும் பட்டினியையும் போக்க உன்னால் ஆனதைச் செய்யக் கூடாதா? அதை நன்றாகச் செய்தாலே உன் கக்ஷியின் பலம் பெருகும். இன்னொரு விஷயம். பசியும் பட்டினியும் நம் ஜனங்களின் உற்சாகத்தை அடியோடு குலைத்து விட்டது என்று நீ நினைப்பது தவறு. இந்தக் கதையைக் கேள் — கதைபோல்தான் இருக்கும், ஆனால் முற்றிலும் உண்மை — ஆஸாம் மாகாணத்தில் ஒரு குக்கிராமம். அதில் கனகலதா என்று ஒரு பெண் இருந்தாள். ஏழைக் குடும்பம்தான். அவள் அதிகம் படித்தவளுமல்ல. காங்கிரஸ்காரர்கள் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது. 'இந்த ஊர் போலீஸ் கச்சேரியைக் கைப்பற்ற வேண்டும். அதன் உச்சியில் மூவர்ணக் கொடியைப் பறக்க விடவேண்டும்' என்ற ஆசை அவள் மனதில் தீயை மூட்டியது. பதினைந்து வயதுப்பெண். பத்துப் பேரிடம் சமாசாரத்தைச் சொன்னாள். அவர்களும் கிளம்பினார்கள்; கூட்டம் வலுத்தது. கச்சேரியின் எதிரே வந்து விட்டார்கள். அந்த ஊர் இன்ஸ்பெக்டர் கொஞ்சம் நல்ல மனிதர். 'அம்மா, வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு! நீ கச்சேரிக்குள் பிரவேசிக்க முயன்றால் துப்பாக்கிக்கு இரையாக வேண்டும்!' என்று எச்சரித்தார். 'அது எனக்குத் தெரியும். ஆனால் இன்று முதல் நாம் சுதந்திர மனிதர்கள். பிரிட்டிஷ்காரருடைய உத்தரவு இனி மேல் செல்லாது. பேசாமல் நீங்களும் எங்கள் கட்சியில் சேர்ந்து விடுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் எப்படியாவது இந்தக் கச்சேரியைக் கைப்பற்றத்தான் போகிறோம். என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டாள். இன்ஸ்பெக்டர் தன் ஜவான்களை வரிசையாக அணிவகுத்து நிற்கும்படி கட்டளை யிட்டார். துப்பாக்கிகள் தயாராயின. ஆனால் கனகலதா அதை லக்ஷியம் செய்யவில்லை. முதல் குண்டு அவள் மார்பில் பாய்ந்து அவள் கீழே விழுந்தாள். கையிலிருந்த மூவர்ணக் கொடியை மட்டும் தரையில் போடவில்லை. பக்கத்திலிருந்தவர் எடுத்துக் கொண்டார். போலீஸ்காரர்களுக்கும் ஜனங்களுக்கும் கைகலந்த சண்டை. ஜனங்களில் ஒன்பது பேர் மாண்டார்கள். ஆனால் தேசியக் கொடி கச்சேரியின் மேல் பறந்தது! இதற்கு என்ன சொல்கிறாய்?" என்றார் அவர்.

சாரங்கனும் பேச்சிற்குச் சொன்னானே தவிர, நம் ஜனங்களின் ஆவேசத்தை அவன் நன்கு அறிந்திருந்தான். நம் தமிழ் நாட்டிலே எவ்வளவோ பேர் கணக்கற்ற வீரச் செயல்கள் புரியவில்லையா?

ஜயப்பிரகாஷ் வெகு நேரம் சாரங்கன் செய்ய வேண்டியதைப் பற்றி விவரமாகச் சொன்னார். "நாட்டில் பரவியிருக்கும் அதிருப்தியையும், பிரிட்டிஷாரால் போடப்பட்ட அரசியல் முட்டுக்கட்டையையும் நம் நன்மைக்கே உபயோகித்துக் கொள்ளலாம். புரட்சி என்பது எங்கிருந்தோ திடீரென்று விழும் இடியைப் போன்ற இயற்கைத் தத்துவம் அல்ல. அதை நாமே உண்டாக்கலாம்; வளர்க்கலாம். இன்று நம் நாட்டில் புரட்சி சூரியனின் உதயம் தோன்றியிருக்கிறது. அதன் வெளிச்சம் மங்கியிருக்கிறது. ஆனால் இரவு வந்துவிடவில்லை. மேகம்தான் சூரிய வெளிச்சத்தை

மறைக்கிறது. இரண்டு ஆற்றல் அறிவிட்டு விலகிவிடும் என்று பயப்படாதே! நீ போ, வெற்றி பெறுவாய்! உன்னைப்போல் பத்துப் பேரைச் சேர்த்துக் கொண்டு நம் இயக்கத்தின் ஒலியை எங்கும் பரப்பு. ஒவ்வொரு கிராமத்தையும் ஒரு சுதந்திரக் கோட்டையாக நிர்மாணம் செய். இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ கூட்டங்கள் போட்டு ஜனங்களுக்கு உணர்ச்சியை உண்டாக்கு! அஹிம்சைதான் நமக்கு ஆயுதம். ஆனால் நமக்கே தீங்கு செய்கிறவர்களிடம் தயை காண்பிக்காதே! அவர்கள் உபயோகப்படுத்தும் ஆயுதத்தாலேயே—நிர்ப்பந்தம் ஏற்பட்டால்—அவர்களை அடக்கு! ஆனால் இதெல்லாம் நான் சொல்ல வேண்டுமா? மேயப்போகும் மாட்டிற்குக் கொம்பில் புல்லைக் கட்டிவிட வேண்டுமா?"

* * *

சாரங்கன் சென்னைக்குத் திரும்பி இரண்டு நாட்கள் ஆயின. கிருஷ்ணகுமாரி தன் அறையைச் சாரங்கனிடம் கொடுத்துவிட்டு வேறு எங்கேயோ போய்விட்டாள். சாரங்கன் தன் வேலையைத் தொடங்குமுன் ஊரின் எல்லோரையும் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று விரும்பினான்.

இதைப் பற்றி அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது, யாரோ கதவைத் தட்டின சத்தம் கேட்டுத் தாழ்ப்பாளைத் திறந்தான். ஒரு பையன் உள்ளே வந்தான். "எங்கே பார்த்திருக்கிறோம் இவனை?"



என்று சாரங்கன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, "ஸார், என்னைத் தெரியவில்லையா?" என்று முப்பத்திரண்டு பற்களையும் காட்டிக் கொண்டே கேட்டான் அந்தப் பையன்.

"அடே அன்னிக்கு என்னமோ அந்த அம்மாளைத் தெரியாதது போலப் பேசினையே! பலே பயல் நீ, வானர சேனையின் வால்தான்!"

"ஆமாம், ஸார்! எதுக்கும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டாமா?" என்று சொல்லும்போது, பையன் முகத்தில் புகழுரையைக் கேட்ட மகிழ்ச்சி பிரதிபலித்தது.

"இதை அம்மா கொடுக்கச் சொன்னாங்க!" என்று அவன் சாரங்கனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சிட்டாய்ப் பறந்தான்.

"உடனே ஊரை விட்டுப் புறப்பட்டுத் தலை மறைவாக இருக்கவும். உங்கள்மேல் போலீஸ் வாரண்ட் பிறந்திருக்கிறது. எந்த நிமிஷமும் நீங்கள் கைதியாக்கப் படலாம்" என்று எழுதியிருந்தது, அந்தச் சின்னக் காகிதத் துண்டில்.

பன்னிரண்டாம் அத்தியாயம்
பாவம், சாமியார்!

"பாவம், வடக்கத்தி சாமியார் போலேயிருக்கு! இங்கே இவருக்குக் கோதுமையும் ரொட்டியும் எங்கேயிருந்து கிடைக்கப் போகிறது?" என்று யாரோ அனுதாபத்துடன் சொல்வதைக் கேட்ட சாரங்கனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். சிரித்தால் தனக்குத் தமிழ் தெரியாது என்று வேஷம் போட்டது வெட்டவெளிச்சமாகி விடுமல்லவா?

யார் தன்மேல் இவ்வளவு கருணை காட்டுவது என்பதைக் காணச் சாரங்கன் கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பிப் பார்த்தான்.

"தேமேனு பாவம்! கையிலே பணமில்லே போலிருக்கு... இந்தாருங்கோ, வைச்சுக்கோங்கோ!" என்று முழுசாக ஐந்து ரூபாய் நோட்டை நீட்டியவுடன் சாரங்கனுக்குச் சந்தேகம் தட்டியது. உற்றுப் பார்த்தான். கிருஷ்ணகுமாரிதான்! 'பாப்' பண்ணியிருந்த தலையில் இப்பொழுது நீண்ட கூந்தல் இருந்தது—ஒரு கட்டுப்

பூவுடன் பெரிய குங்குமப் பொட்டு—பரம்பரையாக வந்தவர்கள்கூட அவ்வளவு கச்சிதமாக வைஷ்ணவக் கட்டுக் கட்டிக் கொள்ள முடியாது! பேச்சில்தான் என்ன, ஏதாவது ஒரு அபஸ்வரம் உண்டா?

சாரங்கனுக்கு இன்னொரு விஷயத்திலும் திருப்தி. கிருஷ்ணகுமாரியால்கூடத் தன் வேஷத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையே! இனி யாரால் முடியும்?

ஆனால் சாரங்கன் சந்தோஷம் நீடித்து நிற்கவில்லை. அது யார் அவன் பக்கத்தில் நிற்பது? ராஜு மாதிரியல்லவா இருக்கிறது? அவனேதான்! சாரங்கன் மனதை என்னவோ செய்தது. எங்கும் அவன் போட்டிதானா? ஆனால்...ஆனால்...தனக்கு என்ன பாத்தியதை கிருஷ்ணகுமாரியிடம்? சாரங்கன் மனதில் இன்னொரு சந்தேகம் தோன்றியது. நிஜமாக, பூமா ராஜுவிற்கே உரியவள் என்று தான் நினைத்தது சுயநலமற்ற எண்ணமா? கிருஷ்ணகுமாரியைக் கண்டபிறகுதானே அந்த நினைவு வந்தது? அதனால்தான் ராஜுவைக் கிருஷ்ணகுமாரியின் பக்கத்தில் பார்த்ததும் ஆத்திரம் வருகிறதுபோலிருக்கிறது!

இப்படி மனம் அல்லல் படும்போது எவ்வாறு சாரங்கனால் தன் வேஷத்தில் கவனம் செலுத்த முடியும்? மனமனவென்று பிளாட்பாரத்திலிருந்த சிற்றுண்டிசாலைப் பக்கம் சென்று, "ஒரு..." என்று ஆரம்பித்தான்.

அதற்குள் அந்த 'ஐயங்கார் பெண்' "அண்ணா, சாமியாருக்குத் தமிழ்கூடத் தெரியும் போலேருக்கே!" என்று இரைந்தே சொன்னாள்.

சாரங்கன் நிலைமையைச் சமாளித்துக் கொண்டான். தவிர, கிருஷ்ணகுமாரியை ஏமாற்றிவிட்டதாக நினைத்துக் கொண்ட புத்தியைத் தட்டிக் கொண்டான்.

சிவனேரிக்கு ரயில் போகாதென்றும், முப்பது மைல்களுக்குத் தண்டவாளம் சரியாக இல்லையென்றும், அப்பால் செல்வது அபாயம் என்றும், யாரோ ஒருவருடைய நாக்கை நேற்றுத்தான் அங்கிருந்த கொள்ளைக்காரர்கள் அறுத்து விட்டார்கள் என்றும் வண்டியிலிருந்தவர்கள் சாமியாரைப் பயமுறுத்தினார்கள்.

அதே வண்டியில் வந்த 'ஐயங்கார் பெண்' "என் அண்ணா! இதெல்லாம் என்கிட்டே சொல்லியிருந்தால் நான் புக்காத்திலேருந்து புறப்பட்டிருக்க மாட்டேனல்லியோ?" என்று கேட்டாள்.



"அதெல்லாம் ஒன்றுமில்லை. யாரோ பத்துப் பேர் சேர்ந்துகொண்டு 'தனி சர்க்கார்' நடத்துகிறார்களாம். எல்லாம் ஒடுங்கிப் போய்விடும் இன்னும் கொஞ்ச நாளில். அப்படி ரொம்ப பயமா யிருந்தால் இங்கே ஒரு சத்திரம் இருக்கிறது. காலமே பொழுது விடிந்தவுடன் போகலாம். பஸ் இருக்கிறது" என்றான் 'அண்ணா' ராஜு.

"இந்தச் சாமியாருக்கு இதெல்லாம் தெரியுமோ என்னவோ? அவர் எங்கே போகிறார்? என் அண்ணா, கொஞ்சம் விசாரியேன்! ஏற்கெனவே நம்ம பாஷை தெரியாது. அதிலே நாக்கை வேறே அறுத்துட்டா கேட்க வேண்டாம்..."

ராஜுவும் சமயோசிதமாக, "நான் விசாரிச்சுட்டேன். அவர் கன்னியாகுமரிக்குப் போகிறாராம். வேணும்னா, அவரை நம்மோடு வரச் சொல்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, "ஹமாரே ஸாத் ஆவ்" என்று ஒரு போடு போட்டான்.

'சாமி'யாரும் பலமாகத் தலையை ஆட்டினார்.

வண்டியில் உட்கார்ந்திருந்த ஒரு போலீஸ்காரனுக்கு இதெல்லாம் மிகவும் தமாஷாயிருந்தது.

"என் சாமி, உனக்கு ஜோஸ்யம் வருமா?" என்று ஏகத்தாளமாகக் கேட்டான்.

சாமியார் 'பேந்தப் பேந்த' விழித்தார்.

ராஜு மொழி பெயர்ப்பதற்கு முற்பட்டான். நல்ல வேளையாக வண்டியி

1947-ம் வருஷத்துக் "கல்கி" சிறுகதைப் போட்டி

முடிவு தேதி 30—9—47

○

முதற் பரிசு :

ரூ. 500

இரண்டாவது பரிசு :

ரூ. 100 விதம் ஐந்து கதைகளுக்கு

●

நிபந்தனைகள்

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கதைகள், தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும். ஏற்கெனவே வெளியான கதைகளும், மொழி பெயர்ப்புகளும், தழுவி எழுதிய கதைகளும் இந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.

2. கதையின் நீளம் "கல்கி"யில் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதாயிருக்க வேண்டும்.

3. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம்; அதற்கு மேல் அனுப்பக் கூடாது.

4. சென்ற 1946-ம் வருஷத்துப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெறாத கதைகளைத் திரும்பவும் அனுப்பக் கூடாது. அம்மாதிரிக் கதைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

5. 1947-ம் வருஷம் செப்டம்பர் 30உக்குள் கதைகள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். கவரின் மேல் "சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500 அளிக்கப்படும். அடுத்தபடியாக ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 விதம் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதைகளின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

7. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும். அவற்றுக்கு உசிதமான சன்மானம் வழங்கப்படும்.

8. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதம் போல் பிரித்துக் கொடுக்கப்படும்.

9. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

10. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

மானேஜர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை

விருந்தவர்களுக்கு ஹிந்தி தெரியாததால் அவன் 'குட்டு' வெளிப்படவில்லை.

சாமியார் சொன்ன ஜோஸ்யத்தை ராஜு மொழி பெயர்த்ததின் சாராம்சம்: "உனக்கு இப்பொழுது ரொம்பக் கடுமையான கண்டம் ஒன்று இருக்கிறது. அதில் வெற்றி பெறுவாய். ஆனால் உன்னோடு இருப்பவர்களை நம்பாதே! ராத்திரி வேளையில் வெளியில் போகாதே! அபாயம் எங்கே யென்று காத்துக் கொண்டிருக்கிறது. அவன் கூப்பிடுகிறான், இவன் கூப்பிடுகிறான் என்று வெளியில் போனால் அவ்வளவுதான்......!"

போலீஸ்காரன் முகம் வெளுத்தது. அதுதான் சமயம் என்று ராஜு அவனைப் பார்த்து, "ஏனப்பா, சாமியார் சொல்றது சரிதானே?" என்று கேட்டான்.

"ஆமாங்க, நமக்குக் கொஞ்சம் கஷ்டமான காலம்தான். நானும் இன்னும் பத்துப் பேரும் இங்கே ஸ்பெஷல் டூட்டிக்காக வந்திருக்கோம். இங்கே யாரோ காங்கிரஸ்காரங்க தனி சர்க்கார் பண்றாங்களாமே? அவங்களை எப்படியாவது பிடிக்கச் சொல்லியிருக்காங்க. தினம் இரண்டு மைலா இந்த ஊரைத் தருவிப் பாக்கிறதா பண்றோங்க. காலேலருந்து தேடி ஆரம்பிக்கிறது. எல்லாரும் சொல்லிக்கிறாங்க, அவங்க ராதகப்பயல்கள் ஊட்டு! காலைக் கையை வெட்டிப் போட்டுட்டா பின்னே குட்டிக்காரங்க என்ன பண்றது? அதுதான் நம்ம எட்டும் சொன்னாரு. நமக்கேன் இந்த வம்பு? பேசாம பத்து நாள் இங்கே அங்கே பார்க்கிறாப் போல் பார்த்துட்டுச் சும்மா இருந்துடலாம்னு...ஏஞ் சாமி! இங்கே ஒரு மாதமா தப்புத் தண்டா ஒண்ணும் நடக்கவில்லையாமே, நிஜமாவா?"

அதற்கு மேல் ராஜுவா விடுவான்? "ஊரில் இருக்கிறவர்கள் ஒன்றுக்குப் பத்தாச் சொன்னா சர்க்கார்கூட நம்பி விடுகிறார்கள். தனி சர்க்காராவது, மண்ணாங் கட்டியாவது! அதெல்லாம் வீண் புரளியப்பா!" என்றான் கூசாமல்.

"அப்படி இருந்தாக்கண்ணா, பின்னையாருக்குத் தேங்காய் உடைக்கிறேன்! ஏதோ பத்து நாள் இருந்தோம்னு பேர் பண்ணிட்டு ஊர் போய்ச் சேரலாம்...சாமி, எனக் கொண்ணும் ஆபத்து இல்லையே?"

ராஜு மொழி பெயர்ப்பதற்கு முன்னமேயே 'சாமியார்' பலமாகத் தலையை அசைத்து விட்டார்! (தொடரும்)



சந்திர ஹாரம்

[ஆசிரியர்: பிரேம்சந்த்] [மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

பத்மா பியூனைக் கூப்பிட்டு, "இதோ பார், அப்பா! சற்று ரமாகாந்த் பாபுவைக் கூப்பிட்டுக் கொண்டு வாயேன்!" என்றாள்.

"அவங்களைக் கூப்பிடத்தான் போகிறேன். மானேஜர் ஐயா அதற்குத்தான் அனுப்பினாருங்க. ஆமாம், நீங்க அவங்க வீட்டிலிருந்தா வரீங்க?" என்று கேட்டான் அந்தப் பியூன்.

"ஆமாம், அவர் வீட்டிலிருந்துதான் வருகிறேன். அவர் வீட்டிலிருந்து புறப்பட்டுப் பத்து நிமிஷத்துக்கு மேல் ஆகி விட்டதே!"

"அப்படியா? அவரு இன்னும் இங்கே வரக் காணோமுங்களே!" என்றான் பியூன்.

'அவர் இங்கேயும் வரவில்லை, வழியிலும் அகப்படவில்லையென்றால், எங்கேதான் போயிருப்பார்?' என்று பத்மா சிந்தனையில் ஆழ்ந்தாள். அவளுடைய மனம் என்னென்ன எண்ணமெல்லாம் எண்ணி ஊசலாடிற்று. கண்களில் நீர் துளித்தது. அவளுக்கு மானேஜரைத் தவிர அங்கே வேறு யாரையுமே தெரியாது. ஆனால் இன்றுவரை அவள் அவருடன் ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை. ஆனால் இன்று சங்கோசத்தையெல்லாம் ஒருபுறமாக ஒதுக்கி வைத்து விட்டு, அவருடன் பேசும்படி நேரிட்டுவிட்டது. ஆகவே அவள் பியூனைப் பார்த்து, "கொஞ்சம் மானேஜர் ஐயாவிடம் சொல்லு...வேண்டாம், வேண்டாம்; என்னையே அவரிடம் அழைத்துப் போ. அவரிடம் முக்கியமான சமாசாரம் ஒன்று சொல்ல வேண்டும்" என்றாள்.

பத்மாவின் நடை-உடையும், ஆடை-அலங்காரமும் பியூனை வெகுவாகக் கவர்ந்து விட்டன. ஆகவே அவன் பயபக்தியுடன் திரும்பி மானேஜர் அறைப் பக்கம் சென்றான். பத்மாவும் அவன் பின்னாலேயே சென்றாள். ரமேஷ்பாபு அவள் வந்திருக்கும் செய்தி யறிந்ததும் எழுந்து வெளியே வந்தார்.

பத்மா அவரை அணுகி, "மன்னிக்க வேண்டும்: உங்களுக்குச் சிரமம் தரும்படியாகிவிட்டது. அவர் இருபது-இருபத்தைந்து நிமிஷத்துக்கு முன்னாடியே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார். இன்னும் இங்கே வரவில்லையா, என்ன?" என்று கேட்டாள்.

"ஓ! மிஸஸ் ரமாகாந்தா! இன்னும் அவர் வரக் காணோமே! தினம் ஆபீஸ் நேரத்துக்குத் தவறாமல் வந்து விடுவாரே! இன்று ஏனோ இன்னும்......" என்று இழுத்தார் ரமேஷ் பாபு.

பத்மா பியூனைப் பார்த்தவாறே, "உங்களிடம் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வேண்டும்" என்றாள்.

"அப்படியானால் உள்ளே வாருங்கள். இங்கே எத்தனை நாழிகைதான் நின்று கொண்டு பேசுவது? எங்கே போயிருப்பார், அவர்? எனக்கே ஆச்சரியமாக இருக்கிறதே! எங்கேயாவது சதுரங்கம்—சிதுரங்கம் ஆட உட்கார்ந்துவிட்டாரோ?......"

"இல்லை ஸார், அவர் எங்கேயாவது ஓடிக்கீடிப் போய்விட்டாரோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது. ஏனென்றால் பத்து நிமிஷத்துக்கு முன்னால் அவர் என்னிடம் ஒரு கடிதம் கொடுத்தார்......" என்று சொல்லியவண்ணம் பத்மா ஒரு கடிதத்தை எடுத்து அவரிடம்

நீட்டி, "இதுதான் அந்தக் கடிதம், பாருங்கள். அவர்தான் உங்களுக்கு ரொம்பவும் வேண்டியவராயிற்றே! உங்களிடம் ஒளிவு மறைவு எதற்கு? ஆமாம், அவர் ஆபீஸுக்கு ஏதாவது பணம் பாக்கி கட்ட வேண்டியிருக்கிறதோ?" என்று கேட்டாள்.

ரமேஷ்பாபு வியப்புடன் அவளைப் பார்த்து, "ஏன்? அவர் உங்களிடம் இது சம்பந்தமாக ஏதாவது சொல்லியிருக்கிறாரோ?" என்று கேட்டார்.

"இல்லை; இது சம்பந்தமாக அவர் என்னிடம் இன்றுவரை ஒன்றுமே சொன்னதில்லை. நானாகத்தான் உங்களைக் கேட்கிறேன்."

"உங்களிடம் எப்படிச் சொல்லுவது என்றுதான் புரியவில்லை. எப்படியும் சொல்லித்தானே தீரவேண்டும்? இன்றைக்குள் அவர் ஆபீசுக்கு முந்நூறு ரூபாய் கட்டியாக வேண்டும். முந்தாநாள் வரும்படியை அவர் கஜானாவில் கட்டவேயில்லை. நோட்டுக்களாயிருந்ததாம். சட்டைப்பையில் போட்டுக் கொண்டு போனாராம். யாரோ கடைத் தெருவில் உருவிக்கொண்டு விட்டானாம்" என்று சொன்னார் ரமேஷ்பாபு.

பிறகு சிறிது புன்முறுவலுடன், "அவர் வீணான வழியில் செலவு ஒன்றும் செய்வதில்லையே!" என்று கேட்டார்.

பத்மா நாணத்தினால் தலை குனிந்து கொண்டு, "அவர் அப்படியெல்லாம் போகிறவராகத் தெரியவில்லை. யாராவது சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டுதானிருப்பார்கள். வெட்கம் காரணமாக அவர் என்னிடம் அதைச் சொல்லாமல் இருந்து விட்டார் என்று எண்ணுகிறேன். ஒரு வார்த்தை அவர் என்னிடம் சொல்லியிருந்தால், அப்பொழுதே நான் பணத்தை எடுத்துக் கொடுத்திருப்பேன். அவர் இதற்காக வெட்கப்பட்டிருக்க வேண்டியதேயில்லை. தவறுதல் ஏற்படுவது மனித ஸ்வபாவம் தானே!" என்றாள்.

ரமேஷ்பாபு அவநம்பிக்கை தாண்டவமாட, "வீட்டில் பணம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

பத்மா குரலில் ஒருவித நிச்சயம் தொனிக்க, "முந்நூறு ரூபாய்தானே வேண்டும்? இதோ போய் நான் எடுத்து வருகிறேன்" என்றாள்.

"வேண்டாம்; அவர் வீட்டுக்கு வந்திருந்தால் அவரிடமே கொடுத்து அனுப்பி விடுங்கள்" என்றார் ரமேஷ்பாபு.

பத்மா எழுந்து வந்து வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, வண்டிக்காரனிடம் 'சௌக்'குக்குப் போகுமாறு சொன்னாள்.

அவள் தன்னுடைய ஹாரத்தை விற்று விடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டாள். அவளுக்கு வேண்டியவர்கள் எத்தனையோ பேர் இருந்தனர். அவள் வாய் அசைத்தால் போதும்; வேண்டிய தொகை கிடைத்திருக்கும். ஆனால் தோழிகளைச் சந்தித்துக் கேட்பதற்குப் பொழுதில்லை, அவளுக்கு. கடைத் தெருவுக்குள் நுழைந்ததும் 'எந்தக் கடைக்குப் போகலாம்?' என்ற யோசனை அவளைப் பீடித்தது. 'நம்மை ஏமாற்றி விடுவார்களோ?' என்று அவளுக்கு உள்ளூற பயம். ஆகவே அவள் சிந்தித்தவாறே இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை ஒரு தடவை கடைத் தெருவுக்குள் சுற்றினாள். ஆனால் எந்தக் கடைக்குள்ளும் நுழைய அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. பொழுதும் விஷம் ஏறுவது போல ஏறிக் கொண்டிருந்தது. கடைசியாக ஒரு கடையில் ஒரு கிழவன் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் சற்றுப் பயம் தணிந்து உள்ளே நுழைந்தாள். கடைக்காரனோ பலே கைகார ஆசாமி. பத்மாவின் அந்தத் தயக்கத்தையும் சங்கோசத்தையும் கண்டதுமே, 'இன்று நமக்கு வேட்டைதான்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

பத்மா தன் ஹாரத்தை எடுத்துக் காண்பித்து, "இதை நீங்கள் விலைக்கு எடுத்துக் கொள்ளுவீர்களா?" என்று கேட்டாள்.

கடைக்காரன் அந்த ஹாரத்தை வாங்கி ஒரு முறை புரட்டிக் கிரட்டிப் பார்த்து விட்டு, "எனக்கு நாலு காசு கிடைப்பதாயிருந்தால் ஏன் எடுத்துக் கொள்ள மாட்டேன்? ஆமாம், கல் அவ்வளவு உசத்தியாயில்லையே!" என்றான்.

"நீங்கள் வாங்கிக் கொள்ளுகிறவர் தானே! அதனால்தான் உசத்தியாயில்லை! இதை விற்பதாயிருக்கட்டும், இதற்கு ஈடு உலகத்திலேயே ஒன்றுகூடக் கிடையாது என்று சொல்லுவீர்கள். அது கிடக்கட்டும், இதை எடுத்துக் கொள்ளுவதாயிருந்தால் என்ன விலைக்கு எடுத்துக் கொள்ளுவீர்கள்?" என்று கேட்டாள் பத்மா.

கடைக்காரன் அதற்கு முந்நூற்றைம்பது ரூபாய் மதிப்பிட்டான். கடைசியில் சிறிது சிறிதாக நானூறு ரூபாய்க்கு உயர்ந்து வந்தான். 'அதற்கு மேல் ஒரு தம்பிடிகூட

அதிகமாகத் தரமுடியாது' என்றும் பிடிவாதமாகச் சொல்லிவிட்டான்.

பத்மாவுக்கோ அவசரம். அவள் 'சட்'டென்று ஒருவித பேரமும் செய்யாமல் பணத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டாள். முன்பு அவள் எந்த ஹாரத்தை வாங்குவதற்காகத் துடியாய்த் துடித்தாளோ, எதை அணிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை குழந்தைப் பருவத்திலிருந்தே அவளுடைய உள்ளத்தில் மூண்டெழுந்திருந்ததோ, அந்த ஹாரத்தை இன்று வாங்கின விலைக்குப் பாதியாக விற்கும் பொழுது கொஞ்சம்கூட அவளுக்கு மன வருத்தமே ஏற்படவில்லை. அதற்கு மாறாக, கர்வம் கலந்த மகிழ்ச்சிதான் அவளுடைய வதனத்தில் தாண்டவமாடியது. பத்மா ஆபீஸ் பணத்தைக் கட்டிவிட்டாள் என்ற விஷயம் தெரிந்ததும் ரமாகாந் ஆனந்தக் கூத்து அல்லவா ஆடுவான்!

'இந்தச் சமயம் அவரும் ஆபீஸுக்கு வந்திருந்தால் வேடிக்கைதான்!' என்று எண்ணியவாறே பத்மா மறுபடியும் முனிஸிபல் ஆபீஸை அடைந்தாள்.

ரமேஷ் பாபு அவளைப் பார்த்ததும், "என்ன, அவர் வீட்டில் இருக்கிறாரா?" என்று ஆதுரத்துடன் கேட்டார்.

"இன்னும் அவர் இங்கே வரவில்லையா? வீட்டுக்கும் வரக் காணோமே!" என்று சொல்லிக் கொண்டே பத்மா தான் கொண்டு வந்திருந்த நோட்டுக் கத்தையை ரமேஷ்பாபுவுக் கெதிரே மேஜை மீது வைத்தாள்.

ரமேஷ் பாபு பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு, "சரியாயிருக்கிறது. ஆமாம், அவர் இவ்வளவு நேரம் எங்கே தங்கி விட்டாரோ, தெரியவில்லையே! இன்று வர முடியாமற் போய்விட்டால், ஒரு லீவு லெட்டராவது எழுதி யனுப்பியிருக்கக் கூடாதோ, அந்தப் பாவி மனிதன்? 'என்னடா இது? இன்னும் ஆளைக் காணோமே!' என்று நான் ஓரேயடியாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளை, சரியான சமயத்துக்கு நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்! உங்களுடைய இந்தச் சமயோசித புத்தியை மெச்சத்தான் வேண்டும். இதுதான் கெட்டிக்காரப் பெண்களுக்கு லட்சணம்" என்று அவளை வாயாரப் புகழ ஆரம்பித்து விட்டார்.

பத்மா அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, தான் இன்று ஒரு படி உயர்ந்து விட்டோம் என்றதொரு பெருமிதத்துடன் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு வீட்டுக்குப் புறப்பட்டாள். அவளுக்கு உடம்பில் ஒருவித விசித்திரமான புல்லரிப்பு ஏற்பட்டது. 'அவர் கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டில் வந்து உட்கார்ந்திருப்பார். போனதும் அவரை 'அழு, அழு' என்று அழ வைத்துவிட வேண்டும். அப்புறம் நாம் செய்த காரியத்தைச் சொல்லித் தேற்ற வேண்டும்' என்றெல்லாம் மனக் கோட்டை கட்டியவாறே வீட்டை அடைந்தாள். ஆனால் அவள் எண்ணியபடி ரமாகாந் வீட்டுக்கு வரவில்லை.

ஜாகேசுவரி, பத்மாவைப் பார்த்ததும், "இந்தக் கொளுத்தும் வெய்யிலில் நீ எங்கே போய்விட்டாய்?" என்று கேட்டாள்.

"ஒரு அவசர ஜோலியாகப் போயிருந்தேன். இன்றைக்கு அவர் சாப்பிடக் கூடச் சாப்பிடாமல் எங்கேயோ போய் விட்டாரே!" என்றாள் பத்மா.

"எங்கே போயிருக்கப் போகிறான்? ஆபீஸுக்குத்தான் போயிருப்பான்!"

"இல்லையே! அவர் ஆபீஸுக்கும் போகக் காணோமே! ஆபீஸிலிருந்து அவரைத் தேடிக்கொண்டு சற்று நேரத்துக்கு முந்தி ஒரு பியூன்கூட வந்துவிட்டுப் போனானே!" என்று சொல்லியவாறே பத்மா மாடிக்குச் சென்று விட்டாள்.

மாடிக்குப் போனதும் முதல் காரியமாகக் கையில் பாக்கியிருந்த பணத்தை எடுத்துப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, அவள் விசிறியை எடுத்து விசிறிக் கொள்ளலானாள். புழுக்கமோ தாங்கவில்லை. இருந்தாலும் அவளுடைய கண்ணும் கருத்தும் வாசற்படி பக்கமே ஈடுபட்டிருந்தன. 'ரமாகாந் ஊரை விட்டே ஓடிப் போயிருப்பான்!' என்ற எண்ணமே இதுகாறும் அவளுடைய உள்ளத்தில் எழவில்லை.

நான்கு மணி அடிக்கும் வரையில் பத்மாவுக்கு அவ்வளவாகக் கவலை உண்டாகவேயில்லை. ஆனால் பொழுது சாயச் சாய, அவளுடைய மனம் கலங்க ஆரம்பித்தது. கடைசியில் அவள் ஆதுரம் தாங்காமல் தன் வீட்டு மொட்டை மாடி மீது ஏறி நின்று கொண்டு, 'ரமாகாந் வருகிறானா?' என்று பார்க்கலானாள். ஆனால் ரமாகாந் எந்தப் பக்கத்திலிருந்தாவது வந்தால்தானே!

மஞ்சள் வெய்யில் மறைந்த பிறகும்கூட ரமாகாந் வாராமற் போகவே, பத்மாவின் மனம் பதைபதைக்கலாயிற்று. 'எங்கே போயிருப்பார்? ஆபீஸிலிருந்து நேரே



வீட்டுக்கு வராமல் அவர் எங்கேயும் போக மாட்டாரே? யாராவது சிநேகிதருடைய வீட்டுக்குப் போயிருந்தால்கூட இத்தனை நேரம் திரும்பி வந்திருக்க வேண்டுமே! அவருடைய சட்டைப் பையில் ஏதாவது சில்லறை இருந்ததோ, இல்லையோ? யார் கண்டது? பாவம், அவர் பகல் பூராவும் பசியுடன் எங்கெல்லாம்தான் சுற்றித் திரிவார்' என்ற எண்ணம் எழுந்ததும், 'கடிதத்தைப் படித்ததும் ஹாரத்தைக் கழற்றிக் கொடுக்காமல் போனேனே! அது கம்பீரந்தான் தப்பு. தயங்குவதற்கு அதுவா சமயம்? சங்கோசத்தினால்தான் அவர் வீட்டுக்கே திரும்பி வரவில்லையோ, என்னவோ? நாம் எங்கே போய் யாரைக் கேட்பது?" என்று அவள் தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

விளக்கேற்றி வெகு நேரமாகியும் ரமாநாத் வராமற் போகவே, பத்மாவுக்குச் சற்றும் இருப்புக் கொள்ளவில்லை. ஆகவே, 'ரத்தனுக்கு ஒருவேளை ஏதாவது தெரிந்திருக்கலாம்' என்று எண்ணி, அவள் ரத்தனுடைய வீட்டுக்குப் புறப்பட்டாள். அங்கே போய் விசாரித்ததில் 'அன்று பூராவுமே ரமாநாத் அந்தப் பக்கம் வரவில்லை' என்று தெரியவந்தது.

பிறகு பத்மா அங்கிருந்து புறப்பட்டுத் தான் ரமாநாத்துடன் வழக்கமாக உலாவப் போய் வரும் பார்க்கு, மைதானம் முதலியவைகளைச் சல்லடை போட்டுச் சலித்துத் தேடிப் பார்த்துவிட்டாள். அவன் எங்கும் அகப்படாமற் போகவே, அவள் நம்பிக்கை இழந்து வீடு திரும்பினாள். இதுவரை அவள் தன் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வெளி வராமல் தன்னை அடக்கியாண்டாள். அவள் வீட்டில் காலடி எடுத்து வைத்ததும் ரமாநாத் அங்கு இல்லாமற் போகவே, கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. அப்படியே அயர்ந்து உட்கார்ந்து விட்டாள். 'அவன் ஓடித்தான் போயிருக்க வேண்டும்' என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தில் இப்போதுதான் வேரூன்றியது. இருந்தாலும், 'தான் புறப்பட்டுப் போன பிறகு, அவர் வந்து விட்டுப் போயிருப்பாரோ?' என்ற அற்ப நம்பிக்கையில் ஜாகேசுவரியிடம்

போய், "என் அம்மா, அவர் வந்திருந்தாரோ?" என்று கேட்டாள்.

"யார் வீட்டில் உட்கார்ந்து கொண்டு அவன் வம்பு அடித்துக் கொண்டிருக்கிறானோ, யார் கண்டது? அவனுக்கு வம்பு அகப்பட்டு விட்டால் போதும், சாப்பாடே தேவையிராது. பத்து மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டவன் இன்னும்தான் வருகிறான், பார்!" என்றாள் ஜாகேசுவரி.

"ஆபீஸிலிருந்து தினம் நேரே வீட்டுக்கு வந்து விடுத்தானே, எங்கேயாவது போவது என்றாலும் அவர் போவது வழக்கம்? இன்றைக்கு மட்டும் ஏனோ இன்னும் வரவே காணோமே! கோபியை அனுப்பிப் பார்த்துக்கொண்டு வரச் சொல்லட்டுமா?" என்று கேட்டாள் பத்மா.

"குழந்தை இந்த அகாலத்தில் எங்கே போய்த் தேடுவான்? அவன் எங்கே போய் உட்கார்ந்திருக்கிறானோ? கொஞ்ச நேரம் பார். அவன் வரவில்லையென்றால் அவனுக்கு என்று ஒரு பாத்திரத்தில் சாதத்தை எடுத்து வைத்து விட்டு உன் காரியத்தைப் பார். அவனுக்காக எத்தனை நாழிகை தான் நாம் காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியும்?" என்றாள் ஜாகேசுவரி.

பத்மா அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை; ஆபீஸில் நடந்த விஷயத்தைப் பற்றியும் தன் மாமியாரிடம் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. 'அதைக் கேட்டு விட்டு ஜாகேசுவரி அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விடுவாளோ' என்று அவளுக்கு உள்ளூற பயம். ஆகவே பேசாமல் மாடிக்குச் சென்று படுத்துக் கொண்டாள். அவளுடைய மனத்தை ஏதோ ஒரு இனம் தெரியாத வேதனை அரம்போல அறுத்துக் கொண்டிருந்தது. தன் பாக்கியத்தைத் தானே நொந்து கொண்டாள். 'அவர் இன்று இரவுக்குள் திரும்பி வரவில்லையென்றால் என்ன ஆகும்? நாளைக் காலையில் என்ன செய்ய வேண்டும்? அவர் எங்கே போயிருக்கிறார் என்ற விவரம் திட்டமாகத் தெரியாத வரையில் யார்தான் எங்கே போய் அவரைத் தேடிக் கண்டு பிடிக்க முடியும்?' என்ற கவலை அவளைச் சூழ்ந்து கொண்டது. 'இந்தக் கஷ்டத்திற்கெல்லாம் நான்தான் காரணம்' என்ற எண்ணம் இன்றுதான் முதல் தடவையாக அவளுடைய மனத்தில் எழுந்தது. அவள் நகைகளுக்காகப் பிடிவாதம் பிடிக்கவில்லை என்பது என்னவோ உண்மைதான். ஆனால் 'எனக்கு நகைகளே வேண்டாம்' என்று தெளிவாகச் சொல்லி அவள் தடுத்ததேயில்லை. நகை திருட்டுப் போனபொழுது, மனம் புழுங்கிப் பொறுமை இழந்து அவள் ஆத்திரம் காட்டியிருக்காவிட்டால், வாயிலிருந்து வார்த்தைகளைக் கொட்டியிருக்காவிட்டால் இன்றைக்கு இம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்குமா?

இதை நினைக்கும்பொழுது பத்மாவுக்குக் குற்றம் பூராவும் தன்னுடையதுதான் என்று பட்டது. 'ரமாநாத் லஞ்சம் வாங்குகிறான்; பணம் பறிக்கும் விஷயத்தில் அவன் பாவம்-புண்ணியம் என்று ஒன்றுமே பார்ப்பதில்லை' என்பது அவளுக்குத் தெரியாத விஷயம் அல்ல. அப்படியிருக்கும்பொழுது அவனைத் தடுத்து நல்வழியில் திருப்பாமல் விட்டது அவளுடைய குற்றம்தானே! அது மட்டுமா? அவள் அப்பொழுதெல்லாம் தன்னுடைய நிலைமை யறிந்து நடந்து கொண்டாளா? தினம் வாடகைக்கு வண்டி அமர்த்திக் கொண்டு கங்கா ஸ்நானத்துக்குப் போவானேன்? ஊர் சுற்றுவானேன்? ரமாநாத் வாங்கித் தரும் பொருள்களையெல்லாம் அவள் ஆவலுடன் எடுத்துக் கொண்டதனால்தானே அவனுக்கு மேலும் மேலும் ஏதாவது வாங்கிக் கொடுத்து அவளைத் திருப்திப் படுத்த வேண்டும் என்று புத்தி போயிற்று!

இதை எண்ணும்பொழுது பத்மாவுக்கு ரமாநாத் இவ்வளவு தூரம் கெட்டதற்குத் தான்தான் மூலகாரணம் என்று தோன்றியது. ரமாநாத் அவளுடைய அழகு மயக்கத்தில் லயித்து, அவளைத் திருப்திப் படுத்தும் நோக்கத்துடன் எதுவும் செய்யத் தயாராய் விட்டானே தவிர வேறொன்றுமில்லை. வாலிபர்களுக்கு இது இயற்கைதானே! அவன் அப்படிச் செய்ததில் எப்படிக் குற்றம் கூற முடியும்? அவள் அல்லவா அவனை இதனின்றும் தப்புவிக்க முயற்சித்திருக்க வேண்டும்? 'வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்வதனால் அனர்த்தம்தான் விளையும்' என்பது அவளுக்கு ஏன் தெரியாமல் போயிற்று?

பத்மாவின் மனத்தை இது போன்ற எத்தனையோ சிந்தனைகள் முற்றுகை யிட்டன. அவள் இம்மாதிரியான கவலையில் உழன்ற வண்ணம் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாளோ, தெரியாது. பாராக்காரர்களின் சீழ்க்கைச் சத்தம் காதுகளில் விழுந்தபிறகுதான் அவளுக்குத் தன் சுய உணர்வு வந்தது. உடனே அவள் கீழே

இறங்கிச் சென்று தன் மாமியார் ஜானகேசுவரியிடம், "இன்னும் அவர் வரவில்லை. நீங்கள் வேண்டுமானால் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள்!" என்றாள்.

ஜானகேசுவரி உட்கார்ந்தபடியே தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். பத்மாவின் குரலைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். பிறகு தூக்கக் கலக்கத்தில் ரமாகாந்தான் வந்துவிட்டானாக்கும் என்று எண்ணி, "என் ரமா, இத்தனை நேரம் எங்கே போய்விட்டாய்?" என்று கேட்டாள்.

பத்மா, "இல்லையம்மா, அவர் இன்னும் வரவே யில்லை!" என்றாள்.

அதற்குள் ஜானகேசுவரி தூக்கக் கலக்கம் தெளிந்து, "இன்னும் அவன் வரவில்லையா? நடுநிசி ஆகியிருக்கும் போலிருக்கிறதே! ஆமாம், அவன் போகும்பொழுது உன்னிடம் ஏதாவது சொல்லி விட்டுப் போனானா?" என்று கேட்டாள்.

"இல்லையே!"

"இல்லையா? அப்படியானால் அவரை எழுப்பட்டுமா?"

"இந்த நடுநிசியில் அவரை எழுப்புவதனால் என்ன பிரயோசனம், அம்மா? நீங்கள் எழுந்து சாப்பிட வாருங்கள்!"

"இனிமேல் பாதி ராத்திரியான பிறகு என்னத்தைச் சாப்பிடுவது? நல்ல பிள்ளை, நமக்கென்று வந்து வாய்த்திருக்கிறது! அம்மம்மா! இந்தமாதிரிப் பிள்ளையை நான் என் ஆயுளிலே பார்த்ததில்லை. வம்பிலே அப்படி என்னதான் வைத்திருக்கிறதோ, தெரியவில்லை. 'போனால் போன இடம், வந்தால் வந்த இடம்' என்று எங்கேயோ போய் உட்கார்ந்துவிட்டானே! போகும் பொழுது, 'இங்கே போகிறேன், வர நாழிகையாகும்; இல்லை, இன்றைக்கு நான் வரமாட்டேன்' என்று அவன் சொல்லி விட்டுப் போயிருந்தாலாவது, நாம் நமது காரியங்களை முடித்துக்கொண்டு, கவலையற்று நிம்மதியாகத் தூங்கியாவது இருக்கலாமோ, இல்லையோ?" என்று சொல்லிய வண்ணம் ஜானகேசுவரி காலை நீட்டிக் கொண்டு படுத்துவிட்டாள்.

ஆனால் பத்மா கண்கொட்டாமல் அப்படியே அசையாமல் உட்கார்ந்தவாறு, மலை போன்ற அந்த இரவின் ஒவ்வொரு கணத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்தாள்.

(தொடரும்)

காலக்ஷேபம்

ஒரு நிமிஷம் போதும்!

ஆள் (ஹோட்டலில்):— அம்பி, இங்கே வா! நல்ல முறுகலாகக் கருகிப் போகாமல் நிறைய நெய் விட்டு, ஐந்து நிமிஷம் வெந்த பிறகு ஒரு தோசை கொண்டு வா!

அம்பி:—இதோ, ஒரு நிமிஷத்திலே கொண்டு வரேன், ஸார்!

அவசியமில்லை!

முதலியார்:—என் அப்பா, சுந்தரசாமி! தோனக் கொல்லை போட்டிருக்கிறியாமே! காக்காய், குருவி உபத்திரவம் ரொம்ப இருக்குமே!

சுந்தரசாமி: அப்படி ஒன்றும் அதிகமாக இல்லீங்க!

முதலியார்:—ஏதாகிலும் பொம்மை கிம்மை வைத்திருக்கிறியோ?

சுந்தரசாமி:—அதெல்லாம் என்னத்துக்குங்க? முக்கால்வாசி நேரம் நானேதான் அங்கே நின்னுக்கிட்டு இருக்கேனே?

புதிய புஸ்தகங்கள்!

சுப்பிரமணியன்:—புதும் புஸ்தக மெல்லாம் வாங்கி விட்டேன், சுந்தரம்! நீ ஒன்றும் வாங்கவில்லையா?

சுந்தரம்:—எனக்கு என்னத்துக்கு அப்பா, புஸ்தகம்? என்னிடம்தான் போன வருஷத்துப் புஸ்தகம் எல்லாம் புத்தம் புதுசாக அப்படியே இருக்கிறதே!

பாதகமில்லை!

சங்கீத சபைக் குமாஸ்தா:— ஸார், இந்த டிக்கெட்டில் ஒருவர்தான் கச்சேரி கேட்கலாம். உங்கள் மனைவியையும் அழைத்துப் போக முடியாது.

வந்தவர்:—அதனால் பாதகமில்லை, ஸார்! விடுங்கள். இவளுக்குச் சுத்தமாய்க் காது கேட்காது.

பகற் கொள்ளை!

இரண்டு திருடர்கள் ஒரு நாள் இரவு ஒரு ஜவுளிக் கடையில் நுழைந்தார்கள். அங்கே ஒரு புடவையில் விலை ரூ. 500 என்று போட்டிருந்ததை ஒரு திருடன் பார்த்தான். "அடேயப்பா, என்ன விலை!" என்றான்.

"விலையாவது! ஒரே பகற்கொள்ளை!" என்றான் அதைக் கேட்ட மற்றவன்.

ஊமை ராஜகுமாரன்

கிச்சு

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்குச் சகல சம்பத்துக்களும் இருந்தும், ஒரே ஒரு கவலையும் இருந்தது. அது என்ன தெரியுமா? ராஜகுமாரனால் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேச முடியாது. அவன் ஊமை. வருங்காலத்தில் இந்த ஊமை ராஜகுமாரன் எப்படி ராஜ்யத்தை ஆளப் போகிறான் என்று எல்லோரும் ரொம்பக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் ஒரு ரிஷி அரண்மனைக்கு வந்து, "மகாராஜா! நீங்கள் கவலைப்பட வேண்டாம்! ஏதோ போன ஜன்மத்தில் செய்த பாவத்தினால் இளவரசன் ஊமையாய்ப் பிறந்திருக்கிறான். ராஜ்யத்திலுள்ள உங்கள் பிரஜைகள் எல்லோரும் திருப்தியடையும்படியான காரியம் ஏதாவது செய்தால், அவனுடைய ஊமைத்தனம் போய்விடும்!" என்று சொன்னார்.

எல்லா ஜனங்களையும் திருப்தி செய்வதற்காக அரசன் எவ்வளவோ காரியங்கள் செய்தான். ஆனால் என்ன செய்தும் ஒரு சிலருக்கு மட்டும் அதிருப்தி இருந்து கொண்டேயிருந்தது. ராஜ்யத்தில் இருந்த எல்லோருக்கும் அரசன் இனாமாகப் பால் வழங்கச் சொன்னான்; பால்காரர்கள் தங்கள் வியாபாரம் கெட்டுவிட்டதே என்று வருத்தப்பட்டார்கள். எல்லோருக்கும் ஒரு வாரம் அரசன் இனாமாகச் சாப்பாடு போடச் சொன்னான்; ஹோட்டல்காரர்கள் தங்கள் வரும்படி போய்விட்டதே என்று வருத்தப்பட்டார்கள்!

இந்த லட்சணத்தில் ஊரிலிருக்கிற எல்லோரையும் எப்படித் திருப்தி பண்ணுவது என்று ராஜாவுக்குப் புரியவில்லை. ஆகவே, அவன் இந்த விஷயத்தில் தனக்குச் சரியான யோசனை சொல்லுபவருக்குப் பதினாயிரம் ரூபாய் வெகுமானம் கொடுப்பதாக விளம்பரம் செய்தான். எவ்வளவோ பேர் எவ்வளவோ யோசனை சொன்னார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை.

ஒரு நாள் மந்திரி, "என் பெண் ஒரு யோசனை சொன்னாள். அது பலிக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான்.

"என்ன?" என்று ஆவலுடன் கேட்டான் ராஜா.

"எல்லா வரிகளையும் உடனே இரண்டு மடங்காக உயர்த்தி விடுங்கள். யார் என்ன சொன்னாலும் குறைக்காதீர்கள். அப்புறம் ஒரு வாரம் கழித்து இளவரசரின் வேண்டுகோளின் பேரில் வரியைக் குறைத்துவிட்டதாகத் தண்டோரா போடச் சொல்லுங்கள்!" என்று தன் மகள் சொன்னதாக மந்திரி சொன்னான்.



அரசனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. மந்திரியின் பெண் சொன்ன யோசனைப்படியே செய்தான். அவனுடைய யுக்தி பலித்தது. ஊரில் எல்லோரும் இளவரசனைப் புகழ்ந்தார்கள். ரிஷி சொன்னபடி இளவரசனும் மடமடவென்று பேச ஆரம்பித்தான்.

ராஜாவுக்கு ஒரே ஆனந்தம். மந்திரி குமாரியின் சாமர்த்தியத்தை மெச்சினான். அவளுக்குப் பதினாயிரம் ரூபாய் வெகுமதி யளித்ததோடு அரசன் நிற்கவில்லை; அந்த மந்திரி குமாரிக்கும் ராஜகுமாரனுக்கும் கல்யாணமும் செய்து வைத்தான்!

நல்ல யோசனை !


1
நாரீமணி ஒருத்தி இரும்புப் பெட்டியி லிருந்து எல்லா வைர நகைகளையும் எடுத்து அணிந்து கொண்டு......
2
......வெளியே எல்லோரும் "வேடிக்கை பார்க்க உலாவி விட்டு வந்து......
3
....நகைகளைக் கழற்றி மீண்டும் இரும்புப் பெட்டியில் வைக்க மனம் வராமல்......
4
......தானே இரும்புப் பெட்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு கதவைச் சாத்திக் கொள்கிறாள் !
—சாயா—

அபிப்பிராய பேதம்!

ஏ. ஆர்.

எனக்கும், என் ஆப்த நண்பன் ஆபத்சகாயத்திற்கும் கடைசியாக ஓர் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டது. இந்த அதிசய சம்பவத்தைக் கண்டு ஊரே அதிசயிக்கும்படி நேர்ந்து விட்டது. இந்த அபிப்பிராய பேதம் ஏற்பட்டபொழுது என் நண்பன் இறந்து விட்டிருந்தான். ஆமாம், அவன் இறந்த பிறகுதான் எங்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஹா! அவன் மட்டும் உயிரோடிருந்திருந்தால் இந்த அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்குமா? நிச்சயமாக ஏற்பட்டிருக்காது. அதைவிட அவன் தன் உயிரையே விட்டிருப்பான்! அந்தப் பாழும் உயிர் இப்போது இல்லாமலல்லவா போய்விட்டது!

“அப்படி யென்ன, பிரமாதமான அபிப்பிராய பேதம்?” என்று கேட்கிறீர்கள்? பிரமாதமானதுதான்; ரொம்பப் பிரமாதமான அபிப்பிராய பேதம்தான்!

அன்று ஊரிலிருந்து வந்ததும் வராததுமாக ஆபத்சகாயத்தின் வீட்டிற்குச் சென்று அவன் மனைவி மக்களைப் பார்க்க வேண்டுமென்று கிளம்பினேன். சென்ற தடவை நான் ஊருக்கு வந்தபொழுதுதான் ஆபத்சகாயம் தன் மனைவியையும், மக்களையும், என்னையும் பரிதவிக்க விட்டுவிட்டு இந்தப் பாப உலகத்தை நீத்தான்!

“ஆபத்சகாயத்துக்கு அபாயம்! உடனே வரவும்” என்று தந்தி வந்தது. அவசரமாகப் புறப்பட்டு வந்தேன். ஆனாலும் ஆபத்சகாயத்தின் பூத உடலைத்தான் கண்டேன். அவனுடைய அகால மரணத்திற்குப் பலர்பலவித்தக்காரணங்கள் சொன்னார்கள். அவனைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர்களும் தனித் தனிக் காரணங்களைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் ஊரில் எல்லோரும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளக்கூடிய காரணம் ஒன்றும் இருக்கத்தான் இருந்தது. அதைக் கண்டுபிடித்துச் சொன்னவர் பால ஜோசியம் பங்காரு நாயுடுதான். அவர் மற்ற ஜோசியர்களைப் போல் அனுபவமில்லாமல் சொல்லிவிடவில்லை; அறுபது வருஷ கால அனுபவத்தின் மேல்தான் சொன்னார். அதாவது, “இந்த ஜாதகனுக்கு ஆயுள் பிராப்தி அவ்வளவுதான்!” என்று. இதை எல்லோரும் ஏகோபித்து ஒப்புக் கொண்டுவிட்டார்கள்!

எது எப்படியாயினும் அவன் எப்படியோ இறந்து விட்டான். அவன் பேசாமல் இறந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். ஆனால் ஊரே கண்டு அதிசயிக்கும்படி எங்களுக்கிடையே அவன் ஓர் அபிப்பிராயபேதத்தை ஏற்படுத்தி விட்டல்லவா இறந்து விட்டான்?

எனக்கும் ஆபத் சகாயத்திற்கும் இருந்த ஆப்த சிநேகத்தையும் மன ஒற்றுமையையும் பற்றி சொல்லப் போனால்—ஹா! இப்படிப் பட்டவர்களுக்கு அப்பேர்ப்பட்ட கதி எப்படி ஏற்பட்டது என்று திகைக்கிறீர்கள். ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள் :—


ஜப்பான் துருப்புகள் கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் இந்தியாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த காலம் அது.

“ஜப்பானியர்கள் இந்தியாவைப் பிடிக்க முடியாது!” என்றேன் நான்.




“முக்காலும் முடியாது!” என்றான் ஆபத்சகாயம்.

பிறகு ஒரு வாரம் கழித்து என் அபிப்பிராயத்தை நான் மாற்றிக் கொண்டேன். மாற்றிக் கொண்டதோடு இல்லாமல் அவனிடம் சொல்லியும் விட்டேன். அதாவது, “ஜப்


வருகிறது
மாடர்ன் தியேட்டர்ஸின்
100
தலைவாங்கி
அபூர்வ
சிந்தாமணி
டைரக்ஷன்:
T.R. சுந்தரம்
B.A., B.Sc., (Leeds)
V.N. ஜானகி, P.S. கோவிந்தன்
C.S. கணேச பாகவதர், R. பாலசுப்ரமணியம்
M.R. சாமிநாதன், காளி N. ரத்னம்
வரலட்சுமி, மாதுரிதேவி
C.T. ராஜகாந்தம்.

$CaOCl_2$



ப்ளீச்சிங் பவுடர்

1774ம் ஆண்டில் குளோரின் வாயு தாவர சத்துக்களாலான சாயங்களை வெளுக்கும் குணம் உடையது எனக் கண்டு பிடித்தனர். இதைத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்தன. அதே நூற்றாண்டின் இறுதியில் சுண்ணாம்பில் குளோரினை ஊட்டும் முறை அறிவிக்கப்பட்டது. குளோரின் கலந்த சுண்ணாம்பு ப்ளீச்சிங் பவுடராகும். ப்ளீச்சிங் பவுடர் என்னும் சுண்ணாம்பு குளோரைட் மிகவும் சிலாக்யமான சலவைப் பொருளாக இருந்து வருகிறது. தவிரவும், குளோரின் நுண் கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்தது.

ப்ளீச்சிங் பவுடர் நீரில் பட்டவுடன் அதிலுள்ள குளோரின் வாயு வெளிப்பட்டு, அதிலுள்ள கிருமிகளை நாசம் செய்து விடுகிறது.

ஆகவே ப்ளீச்சிங் பவுடர் சிறந்த கிருமி நாசினியாக உபயோகப் படுகிறது.

ப்ளீச்சிங் பவுடர் இன்று அனேகமாக எல்லா உற்பத்தி தொழில்களிலும் கையாளப் படுகிறது. பருத்தி உடைகள் வெளுக்க கம்பளிமேல் அச்சிட, வெள்ளை பேபர் தயாரிப்பு, பெட்ரோலியம் சுத்தம் செய்ய, குளோரோபாரம் உற்பத்தி சுகாதார பாதுகாப்பு வேலைகள் இவைகளில் பெருவாரியாக பயன் படுகிறது.

28 முதல் 32 சத விகிதம் குளோரின் கொண்ட 'காவேரி' பிராண்ட் ப்ளீச்சிங் பவுடர், 28, 98, 160 பவுண்டுகள் அளவில் டின்களிலும் இரும்பு பேரல்களிலும் சப்ளை செய்யப் படுகிறது.





வெளியிடுவோர்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்

மானேஜிங் ஏஜண்டுகள்:


சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சிறுப்பள்ளி

பூரண விற்பனை ஏஜெண்டுகள்:—

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிட்

தலைமை ஆபீஸ்: 120, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1


பிராஞ்சுகள்: பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர், ஹைதராபாத், கும்பகோணம், மேட்டூர் டாம், சேலம், திருச்சிறுப்பள்ளி, திருவனந்தபுரம்.


*சித்ரா:
குறுகுறுவென்ற கருவிழிகள் . . .
மாசற்ற மதிவதனம் . . .
உங்கள் சருமத்திற்கு உங்களால் முடியுமான முக்கிய பராமரிப்பு, அதை செம்மையாகச் சுத்தம் செய்வதே யென்பது நீங்களும் அறிவீர்கள், இல்லையா? . . நறுமணங்கமழும் பாண்ட்ஸின் உதவியால், வதனத்தை சுத்தமாகவும் காந்தி யோங்கவும் வைத்துக் கொள்ளுங்கள்.
என்னே *அவளது எழில்!
அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்!
பாண்ட்ஸ்
பாண்ட்ஸ் க்ரீம்ஸ்
POND'S
பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டு வேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யூவால் துடைத்துக் கொள்ளவும்.
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்திலுள் மறைகிறது—சருமத்திற்கு பாதுகாப்பளிக்கிறது.
பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் பூவிதழ்போன்ற மோகன காந்தியுடன் விளங்கும்.
வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ.
(இந்தியா) லிட்.
பம்பாய்–கல்கத்தா–கராச்சி–சென்னை.



மகோன்னதமான புதிய இசைத்தட்டுகள்!
மதுரகீதவாணி
ஸ்ரீமதி என்.ஸி.வஸந்தகோகிலம்
பாரதியார் தினப் பிரத்தியேக வெளியீடு!
N. 18339 { கனவு பலித்ததடி
பூரணமான சுதந்திரம் }
(ஸ்வாமி சுத்தானந்த பாரதி இயற்றியது)
ஜி.என்.பி
ஆஸ்தான வித்வான்
ஜி.என். பாலசுப்ரமண்யம்
ராஜமாணிக்கம் பிள்ளை
பாலக்காடு மணி ஐயர் .....
HT. 125 { ராதா ஸமேதா — மிஸ்ர யமன்
ஹிமகிரிதனயே — சுத்ததன்யாஸி }
மிஸ் பத்மினி விஜயராகவன்
N. 18331 { இவனுரோ
(காம்போஜி) }
ராதா & ஜெயலக்ஷ்மி
N. 18839 { விநாயக-ஹம்ஸத்வனி
ராமா நீவே-நாராயணி }
HIS MASTERS VOICE
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்
டம்டம் — பம்பாய் — மதராஸ் — டில்லி — லாகூர்


மற்ற
ஸோப்புகள்
உங்களுக்கு
முகவனப்பு
அழகு
காதல்
தூக்கம்
முதலியவற்றை அளிப்ப-
தாகக் கூறுகின்றன.
நாங்கள் இவ்வித வாக்குறுதி
ஒன்றும் கொடுப்பதில்லை
ஆனால் தற்சமயம்
ஓர் உயர் தர
ஸ்நான
ஸோப்பை
சமர்ப்பிக்கிறோம்.
அதுவே எங்கள்
காந்தி
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்.,
பம்பாய்



தாமதியாதீர்கள் !



பிஸ்மாக் BISMAG

உட்கொள்ளுங்கள் !

நல்ல சாப்பாட்டுக்குப் பிறகு, இன்றுபோல் நீங்கள் வேலைசெய்ய வேண்டியிருந்தால்— பிஸ்மாக் (பைஸுரேடட் மக்னீஷியா) உட்கொள்ளுங்கள். மிகச் சுலபமானதும் அஜீரணம், வயிற்றுப் பொருமல், வயிற்று மந்தம் இவற்றை சகலவித வயிற்றுக் கோளாறுகளுக்கும் இன்றியமையாதது.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்! பிஸ்மாக் உட்கொண்டு நல்ல ஜீரண சக்தி அடையுங்கள்



மாத்திரையாகவும் பௌடராகவும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

Sole Distributors in India:
Geoffrey Manners & Co., Limited
BOMBAY, CALCUTTA, MADRAS and LAHORE

இந்தியாவுக்கு பூரண விநியோகஸ்தர்கள் :
ஜியோப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்
பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூர்



குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், வாந்தி, பல் முளைக்கும் போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த டானிக்.

பேபிகிரைப்

மிகச் சிறந்த ரத்த சுத்தி மருந்து

இது சரீரத்தில் உஷ்ணத்தை அதிகரித்து அஜீரணம் வாயுவும் ரோகங்களை குணப்படுத்தி. தேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்



அயோடிசால்



குடைப்பு, சேற்றுப் புண் சொறி, வேனல் கட்டி, நீர்ப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்கும் கைகண்ட
— மருந்து —

சைபால்

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

ஏஜண்டுகள்:—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், தைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பெர்ஹாம்பூர் & ஹைதராபாத்; கிரீமர் மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி

சிலோன் ஏஜண்டுகள்:—M.O.A. கனி & கோ., 98, சதாம் ரோடு, கோட்டை, கொழும்பு

பாணியர்கள் இந்தியாவைப் பிடித்து விடுவார்கள்!" என்ற ரகசியத்தைத்தான்!

அடடா! என்ன மன ஒற்றுமை, என்ன மன ஒற்றுமை! உடனே அவனும், "நிச்சயமாகப் பிடித்து விடுவார்கள்!" என்று என் அபிப்பிராயத்தை ஆமோதித்துத் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு விட்டான்!

இம்மாதிரி இருந்த எங்களிடையே திடீரென்று அந்த அபிப்பிராய பேதம் ஏற்பட்டதென்றால் ஏன் ஊரே கண்டு அதிசயிக்காது?

இப்படியெல்லாம் நான் என்னவெல்லாமோ எண்ணிக் கொண்டே ஆபத்சகாயத்தின் வீட்டிற்குச் சென்று, அவன் மனைவி மக்களைப் பார்த்து அவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரித்தேன். ரொம்ப கஷ்ட ஜீவனம். அவன் மனைவி அழுதே விட்டாள். அவளைத் தேற்றுவது எனக்குப் பெரும் பாடாகி விட்டது. அவள் தன்னுடைய வறுமை நிலையை என்னுடைய நெஞ்சமுருக எடுத்துச் சொன்னாள். கடைசியாக, அவள் தன் கணவனை மனப் பூர்வமாக வெறுப்பதாகச் சொல்லி முடித்தாள்!

நான் திடுக்கிட்டேன். "ஏன்?" என்ற கேள்வி என் தொண்டையிலிருந்து கடுக்கத்துடன் வெளிவந்தது. இந்தச் சமயம் ஸ்ரீமான் அனுதாபகர் அங்கு வந்து சேர்ந்தார். என்னுடைய கேள்விக்கு அவரே சுற்றி வளைத்துப் பதிலளித்தார்.

இந்தப் பாழாய்ப் போன உலகத்தில் கொடிப்பொழுதில் உயிரை மாய்க்க நேரும் அபாயங்களையெல்லாம் எனக்கு நினைவுறுத்தினார். இந்தப் பொய்யான உலகத்தில் உற்றார், உறவினர், சுற்றம் எல்லாம் அநித்தியம் என்று என்னை ஒப்புக் கொள்ளும்படி செய்தார். இப்பொழுது ஆபத்சகாயத்தின் உறவின் முறையார்கள் யாரும் அவன் குடும்பத்தின் வறுமை நிலையைப் போக்க முன் வரவில்லையென்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி நிதர்சனமாகச் சுட்டிக் காட்டினார். கடைசியில், "இன்று ஆபத்சகாயத்தின் மனைவி மக்கள் பரிதவிப்பதற்குக் காரணம் என்ன? அவன் மட்டும் என்னிடம் குறைந்த பக்ஷம் ஓர் ஐயாயிரம் ரூபாய்க்காவது இன்ஷ்யூர் பண்ணிக் கொண்டிருந்தால், இப்போது அவன் குடும்பம் இப்படி அவதியுற வேண்டியதில்லையல்லவா?" என்றும் கேட்டுவைத்தார்!

எனக்கும் அது சரியென்றே பட்டது. உண்மைதானே? ஆபத்சகாயம் எவ்வளவு பெரிய தவறு பண்ணி விட்டான்! அவன் உயிரோடிருந்தவரை ஸ்ரீமான் அனுதாபகர் தன் வீட்டில் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தானுமே! தன் உடலில் உயிர் இருக்குமளவும் தான் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ளப் போவதில்லையென்று வேறு சபதம் கூறியிருந்தானுமே!

கவனியுங்கள்; நன்றாகக் கவனியுங்கள். இங்கேதான் எங்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது—ஆமாம், நீங்கள் நினைப்பது சரிதான். நான் ஏற்கெனவே ஸ்ரீமான் அனுதாபகரிடம் ரூபாய் பதினாயிரத்துக்கு என்னை இன்ஷ்யூர் செய்து கொண்டிருக்கிறேன். நான் இவ்வாறு செய்து கொண்டிருக்கையில், ஆபத்சகாயம் எனக்கு எதிராக இன்ஷ்யூரன்ஸைப் பற்றி அபிப்பிராயம் கொண்டிருந்தான் என்றால் ஏன் ஊரே கண்டு அதிசயிக்காது? அவன் மனைவிதான் அவனை ஏன் வெறுக்க மாட்டாள்?




"என்னப்பா, இது! காப்பிக்காக எவ்வளவு நாழி காத்துக் கொண்டு இருக்கிறது? எங்கே உங்கள் முதலாளி? கூப்பிடு, அவரை!"

"கொஞ்சம் இருங்க! அவர் காப்பிப் பொடி வாங்கத்தானுங்க போயிருக்காரு: 'க்யூ'விலே நின்னுக்கிட்டு இருப்பாருங்க. இதோ வந்துடுவாரு!"


● ●


SIROLIN





Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.



ALKI செப்டம்பர் 21, 1947 4 அணா

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS 384

ஒரிஸ்ஸா, நிஜாம் ஸமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள் :

ஸ்ரீ தாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர் - செகந்திராபாத்

பெஜவாடா - மதுரை

எப்போதும் அவர் களைத்தும் நோய்வாய்ப்பட்டு மிருந்தார்

மூன்றுவித கோளாறுகள் அவருக்குப் பாதகமாக இருந்தன

இப்போது அவருக்கு வாழ்க்கையே ஒரு இன்ப மயம்—எல்லாம் க்ருஷன் செய்த உதவிதான்!

முடக்கு வாதம், நரம்புத் தளர்ச்சி, மூத்திர கோச நோய் இம் மூன்றினாலும் பிடிக்கப்பட்ட மனிதர் எப்போதும் களைப்படைந்து நோய்வாய்ப் பட்டிருப்பதில் ஆச்சரியமேது! இருந்தபோதிலும் —நான்கு வாரங்கள் க்ருஷன் சாப்பிட்டதால் "முற்றிலுமே மாறுதலான" நிலைமையை உண்டாக்கி விட்டதென அவர் எங்களுக்கெழுதிய கடிதமொன்றில் கூறுகிறார் :—

"சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு முடக்கு வாதம், நரம்புத் தளர்ச்சி, மூத்திர கோசக் கோளாறு ஆகியவற்றால் மிகவும் உற்சாகம் குன்றிப் போனேன். எப்போதும் நிரந்தரமான களைப்பு. வைத்தியம். எவ்வளவோ மருந்துகளை உபயோகித்துப் பார்த்தேன். க்ருஷனை உபயோகிக்கும் வரை எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. நான்கே வாரங்களில் "முற்றிலுமே மாறுதலான" நிலைமை ஏற்பட்டது. ஆரோக்யமான ஜீரண சக்தி ஏற்பட்டது. மறுபடி உயிர் வாழ்வதிலும் சுகமிருக்கிறதென்பதை உணருகிறேன்."—எஸ். வீ. என்.

மனித யந்திரத்தின் வடிகால் போன்றது—மூத்திரக் கோசம். உடலிலிருந்து சில விஷக் கழிவுகளை அகற்றுவதே அதன் வேலையாகும். மூத்திரக் கோசத்தில் கெடுதலிருந்தால்— அசுத்தங்கள் இரத்த ஓட்டத்தில் கலந்து விடும். பிறகு ஆறு வகை நோய்களுக்கு அஸ்திவாரம் போட்டது போலாகும்.

க்ருஷனில் ரஸாயன முறைப்படி சேர்க்கப்பட்ட உப்புக்களும் கெட்டிருந்த மூத்திர கோசத்தை மறுபடி சரிவர வேலை செய்யத் தூண்டுகின்றன. வலியால் வருந்தும் நோயாளிகளுக்குப் பெரிதும் ஆஸ்வாசவம் ஏற்படுகிறது. உங்களது வியாதி ஒழியும்-மறுபடியும் வாழ்க்கையே இன்பமாகத் தோன்றுகிறது.

க்ருஷன் சால்ட்ஸ் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-10-0 விதம் எல்லா கெமிஸ்டுகளிடமும், வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



பப்ளிஷர் ஆபீஸ்: 142, [illegible]. இலங்கைக்கு சோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்
மெஸர்ஸ். துரை, அருள் & கோ., லிட்., 93, கெய்ஸர் தெரு, கொழும்பு